Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா 3-50

# முஸ்லிம் காங்கிரஸ் مسلم كنكرس
MUSLIM CONGRESS

அக்கரைப்பற்றுச் சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட சகோ. அலி உதுமான், சகோ. நயீம் ஆகியோரின் குடும்பத்தினருக்கு முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னார்களது ஆத்ம சாந்திக்காக அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் தந்தையார் அல்ஹாஜ் எம். ஏ. எம். ஹுஸைன் அவர்களது மறைவையிட்டு-அன்னாரது குடும்பத்தினருக்கு முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது ஆத்ம சாந்திக்காக அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றது. - ஆ-ர்

அல்லாஹ்வின் ஒற்றுமையெனும் கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். பிரிந்துவிடாதீர்கள். (அல் குர்ஆன்)

மலர்: 4 ★ துல்ஹஜ்-முஹர்ரம் ● ஜூலை ஆகஸ்ட் 1989 ● இதழ் 8

அலி உதுமானின் படுகொலைக்கு

# பதில் சொல்வது யார்?

கடந்த 1-8-89 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் அக்கரைப்பற்று மூன்றும் குறிச்சிப் பகுதியில் E. N. D. L. F. ஐச் சார்ந்த பயங்கரவாதக் குழுவினால் அப்பாவி முஸ்லிம்கள்மீது பகிரங்கமாகவும், பலாத்காரமாகவும், தன்னிச்சையாகவும் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில்-வட கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரும், செயல் வீரருமாகிய இளஞ்சிங்கம் மர்ஹூம் எம். ஐ. அலி உதுமான் அவர்கள் படுகொலை செய்யப்பட்டது வட-கிழக்கு மாகாணத்தில் ஜனநாயக-சகோதரத்துவப் பேணுதலில் முஸ்லிம்கள் கொண்டுள்ள நம்பிக்கையின்மீது அண்மையில் ஏற்பட்டுள்ள பாரிய சறுக்கலாகும். இச்சம்பவத்தில் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவனான மர்ஹூம் எஸ். ஐ. நயீமும் கொல்லப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

திட்டமிட்டு அப்பாவி முஸ்லிம்கள்மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலையும், படுகொலைகளையும் ஸ்ரீ ல. முஸ்லிம் காங்கிரஸ் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

வடகிழக்கு மாகாண சபையினை ஆளும் அரசாங்கத்தின் பங்காளி

## வட-கிழக்கு மாகாண சபையும் இந்திய அமைதிப்படையுமே !!

யான ENDLF குழுவினர் இப்படு கொலைகளுடன் சங்கிலித் தொடராக மேலும் சுமார் பத்துப்பேருக்குச் சூட்டுக் காயங்களை ஏற்படுத்தியும்-சுமார் 15 வீடுகளைச் சுட்டு உடைத்து நொறுக்கிச் சேதப்படுத்தி வெறித்தனமாடியும்-தமது முஸ்லிம் சமூக விரோத நடவடிக்கைகளை வெளிப்படுத்தினர். இதன்மூலம் முஸ்லிம் சமூகத்தின்மீது தமக்குள்ள பகைமையினை உலகுக்கு நிர்வாணமாக வெளிக்காட்டியுள்ளனர்.

வட-கிழக்கு முஸ்லிம்கள்மீது-குறிப்பாக கிழக்கிலங்கை முஸ்லிம்கள்மீது நிகழ்த்தப்படும் தாக்குதல்கள் ஒன்றும் புதியனவல்ல. இவ்வாறான நடவடிக்கைகள் காலத்திற்குக் காலம் ஆயுதம் ஏந்திய சில தீவிரவாதக் குழுக்களால் கொலைகள், கொள்ளைகள், உடைமைகளுக்குத் தீ மூட்டுதல், ஆட்கடத்தல், கப்பம் கேட்டல் போன்ற வடிவங்களில் முஸ்லிம்கள்மீது மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. இச்சம்பவங்களின் தொடர்ச்சியாக-கடைசியாக நிகழ்ந்த சம்மாந்துறைச் சம்பவங்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய அமைதிப் படை விலகல் விவகாரம்:
பேச்சுவார்த்தைகளில்

# முஸ்லிம்களின் முதுகைக் குத்தி முடிவு காணக்கூடாது!!

இலங்கையில் நிலைகொண்டிருக்கும் இந்திய அமைதிப்படை விலகல் தொடர்பாக ஒரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டதும், அந்த நிலைமையைத் தணிக்கும்வகையில், கடந்த ஜூலை 29-ந் திகதி இந்திய அமைதிப் படையின் ஒரு பிரிவான சுமார் 620 வீரர்கள் திருப்பி அனுப்பப்பட்டதும், அதே தினத்தில், படை விலகல் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசு இணங்கி வெளிவிவகார அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தலைமையில் தூதுக்குழு ஒன்று புது டில்லி சென்று- 6 நாட்கள் தொடர்ந்து இந்திய அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, பிரச்சினை தொடர்பாக ஒரு தீர்க்கமான உடன்பாடு ஏற்படாத நிலையில் கொழும்பு திரும்பியது அனைவரும் அறிந்ததே !

இந்தியாவும் இலங்கையும் விரும்பியோ, விரும்பாமலோ ஒன்றில் ஒன்று சார்ந்து நிற்கவேண்டிய கட்டாயத்தன்மை பூகோள, கலாசார, வர்த்தக ரீதியில் பார்க்கையில் தவிர்க்கமுடியாததாகும். இந்தநிலையில், இரண்டு நாட்டு அரசுத் தலைவர்களும் புரிந்துணர்வு ரீதியில் செயல்படுவது அவசியமாகும்.

இந்தவகையில், இந்திய அமைதிப்படை விலகல் தொடர்பான விடயம் பேச்சுவார்த்தைகள்மூலமே தீர்க்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு இணங்கி செயல்படுவது வரவேற்புடையதாகும். அர்த்தமற்ற வீராப்புப் பேச்சுக்களை விடுத்து காரியசாத்தியமான அணுகுமுறையை மேற்கொள்வதே இரு நாடுகளுக்கும் விவேகமான செயலாகும்.

அதேவேளையில், நடந்துமுடிந்த பேச்சுவார்த்தையில் வடகிழக்கு வாழ் முஸ்லிம்களின் அபிலாஷைகளை சரியாக பிரதிபலிக்கக்கூடியதாக ஸ்ரீ. ல. முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதித்துவமும் இடம்பெற அழைக்கப்படாதது கவலைக்குரியதாகும். இனிமேலும் இந்திய அரசும், இலங்கை அரசும் முஸ்லிம்களை புறக்கணித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுமாயின் அது பூரணத்துவமுடையதாக-வடகிழக்குப் பகுதிகளில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பிரச்சினைகளையும் அவர்களின் அரசியல் ஏக்கங்களையும், எதிர்பார்ப்புக்களையும் வெளிக்காட்டாத பேச்சுவார்த்தைகளாகவோ, ஒப்பந்தங்களாகவோ மட்டுமே இருக்கமுடியும் என்பதை இங்கு மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறோம்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டபோது வடகிழக்கு முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டதும், இவர்களின் உண்மையான பிரதிநிதிகளின் கருத்துக்களை அறிய முற்படாததுமே- அவ்வொப்பந்தத்தின் அடிப்படைக் குறைபாடாக இருந்து-இன்று அது வெற்றியளிக்க முடியாத ஒப்பந்தமாக உள்ளது என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்டியாகவேண்டும். முன்னர் விட்ட தவறை மீண்டும் விடாமல், முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதியான ஸ்ரீ. ல. மு. காங்கிரஸையும்-எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் எந்தப் பேச்சுவார்த்தையிலும் கலந்து கொள்ள அனுமதிக்கவேண்டும்.

ஏனெனில் வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் சமூகரீதியாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு முன்னரும், பின்னரும் இப்பிரதேச முஸ்லிம்கள் அடைந்துவந்துள்ள இன்னல்கள் இலங்கை வரலாற்றில் இரத்தக்கறை பதிந்த பக்கங்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

(8-ம் பக்கம் பார்க்க)

**"முஸ்லிம்களின் நிரந்தர அமைதிக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதமளிக்காத எந்த ஏற்பாடும் வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல, முழு இலங்கைக்கும் நிரந்தர அமைதியை ஏற்படுத்தப்போவதில்லை என்பதை எதிர்காலம் நிச்சயம் நிரூபிக்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் காங்கிரஸ்

375/2, டாம் வீதி, கொழும்பு-12. தொலைபேசி: 31711

# பயங்கரமான நிலையில் நாடு; பரிதாபகரமான நிலையில் முஸ்லிம் சமூகம்!

வடகிழக்கில் சமாதான ஒப்பந்தின் பின்னரும் கூட மீண்டும் இரத்த வெள்ளம் ஓடத் துவங்கியுள்ளது. முஸ்லிம்களின்மீதான அட்டகாசமும், அநியாயமும் தலைவிரித்தாடவும் ஆரம்பித்துள்ளது. ஆகஸ்ட் முதலாம் திகதி முஸ்லிம் காங்கிரஸின் அத்திவார மூலைக்கற்களில் ஒன்றான எம். ஐ. அலி உதுமான், E. N. D. L. F. துப்பாக்கி ரவைகளினால் சுக்குநூறுக்கப்பட்டது; வடகிழக்குக்கு அப்பால் தென்னிலங்கையிலும் -- பயங்கரவாதமும், ஹர்த்தால்களும் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்திருக்கின்றது.

சமாதான ஒப்பந்தத்தின் பின் ஏற்படுத்த முடியாமல்போன சமாதானத்தை எவ்வாறு உருவாக்குவது எனத் தெரியாமலும்- தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பை அடக்கும் சக்தியை இழந்த நிலையிலும்- அரசு இன்று செய்வதறியாமல் தவித்துக்கொண்டிருக்கின்றது.

சமூகங்களுக்கு மத்தியில் - சமாதானத்தை உருவாக்கும் முயற்சியில் எல்லா சமூகங்களுடனும் பேச ஆயத்தமாயிருக்கும் அரசு-முஸ்லிம்களுடைய விவகாரத்தில் மாத்திரம் பேசும் விடயத்தைத் தள்ளிப்போட்டுச்கொண்டே போகின்றது.

''ஆயுதம் தாங்கியவர்களுடன் மாத்திரம்தான் பேசுகின்றோம்'' என்ற சாக்கை வைத்துக்கொண்டு முஸ்லிம்களுடைய பாதுகாப்பு விடயத்தில் அரசு போதிய கவனம் செலுத்தாமல் இருப்பது கண்டிக்கத் தக்கதாகும்.

அதுமாத்திரமன்றி, இவ்வாறு அசமந்தப் போக்குகளைக் கடைப்பிடித்ததால்தான்- இந்நாட்டில் சிங்கள, தமிழ் சமூகங்கள் ஆயுதங்களைத் தூக்கின என்பதை அரசு மறந்துவிடக்கூடாது. பழைய வரலாற்றிலிருந்து பாடங்களைப் படிக்கவும் தயங்கக்கூடாது.

முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் ''பலிக்கடா''வாகின்ற நிலையில் முஸ்லிம் வாலிபர்களும் ஆயுதந் தாங்கும் மனநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். ''ஆயுதந் தாங்கும் மனநிலை'' என்பது ஜனநாயக வழியில் நம்பிக்கையை இழப்பது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற இந்திய அமைதிப்படை விவகாரப் பேச்சுவார்த்தையில்கூட திரு. ராஜீவ் காந்தி ''பேச்சுவார்த்தைகளில் ஸ்ரீ. ல. முஸ்லிம் காங்கிரஸும் அழைக்கப்படவேண்டிய அவசியத்தை'' உணர்த்தியிருப்பது முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைத்த முதல் வெற்றியாகும். வட-கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாளின் அறிக்கையும்கூட முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றி நம்பிக்கை ஊட்டுகின்றது.

இன்று முஸ்லிம்கள் செய்யவேண்டியதெல்லாம் - வேறுபாடுகளுக்கு மத்தியில் நமது ஒற்றுமையைப் பலப்படுத்தி பொறுமையுடன் அரசியல் நடவடிக்கைகளை அவதானிப்பதாகும்.

## பாதிக்கப்பட்ட திஹாரியப் பகுதிகளுக்கு

### தலைவர் அஷ்ரஃப் விஜயம்

கம்பஹா மாவட்டப் பகுதியில், குறிப்பாக திஹாரியப் பிரதேசத்தில் ஏற்பட்ட திடீர்ப் புயல் காற்றினால் அண்மையில் பல முஸ்லிம் குடும்பங்களின் வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாயின. அப்பகுதிச் சேதங்களைப் பார்வையிடவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறவும் கடந்த 25-7-89ல் முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகத்திலிருந்து தலைவர் சகோ. எம். எச். எம். அஷ்ரஃப் தலைமையில் குழு ஒன்று திஹாரிய சென்றது.

புயலினால் ஏற்பட்ட சேதங்களை பார்வையிட்டதுடன், பாதிப்படைந்த அப்பகுதி மக்களுக்கு ஆறுதல்களையும் கூறியது. தலைவரின் நேரடி நடவடிக்கையின்பேரில், உடனடியாகச் சில வீடுகளைச் சிரமதானம் மூலம் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஸ்ரீ ல. முஸ்லிம் காங்கிரஸின் திஹாரிய பகுதிப் பிரமுகர் சகோ. காதர் அவர்களின் ஆலோசனையின்படி புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## சபையில் சொன்னார்கள் . . . .

★ ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச அடிக்கடி கூறும், 'ஆலோசனை கலப்பு, ஒருமனதான முடிவு, விட்டுக்கொடுப்பு' ஆகியவைதான் அரசின் தெளிவான சிந்தனையின் பின்னர் வகுக்கப்பட்ட கொள்கையென்றால், அந்தக் கொள்கையை அமுல்படுத்த இன்றைய சந்தர்ப்பத்தைவிட வேறு சந்தர்ப்பம் இருக்க முடியாது.

- மறைந்த அ. அமிர்தலிங்கம் M.P.

★ வடக்கு-கிழக்கிலும் பிரச்னை தீரவில்லை. தெற்கிலும் பிரச்சினைகள் ஓயவில்லை, ஊழியர் மத்தியில் பொருளாதார நெருக்கடி வலுத்திருக்கிறது. இந்த நெருக்கடியே போராட்டத்திற்கு வழி செய்கிறது.

- அத்தாவுட செனவிரத்ன M.P. (U.S.A.)

★ L.T.T.E- அரசு பேச்சுவார்த்தைகளின் உண்மையினை வெளிப்படுத்துங்கள். இதனைக் கெஞ்சிக் கேட்கிறேன். -

ஆர். திவ்வியநாதன் M.P.

ஈரான் பிரதி வெளிவிவகார அமைச்சர்

## ஜவாத் மன்சூரிக்கு வரவேற்புபசாரம்

ஸ்ரீ. ல. மு. காங்கிரஸ், அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஈரான் இஸ்லாமியக் குடியரசின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கௌரவ ஜவாத் மன்சூரிக்கும், அவரது குழுவினருக்கும் வரவேற்பு விருந்துபசாரம் ஒன்றினை கடந்த 27-7-89ல் ஹில்டன் இன்டர்நெஷனல் ஹோட்டலில் நடாத்தியது.

இவ்வைபவத்திற்கு முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் சகோ. எம். எச். எம். அஷ்ரஃப் தலைமை வகித்தார். அவர் தனது உரையில் கூறியதாவது:-

''இஸ்லாமியத் தலைமைத்துவப் புரட்சியை ஈரானில் முன்னின்று நடாத்தி வெற்றிகண்டவர் காலஞ்சென்ற இமாம் ஆயத்துல்லா கொமெய்னி அவர்கள். 'மேற்கும் வேண்டாம்; வேண்டாம். முதலாளித்துவமும் வேண்டாம்; சோஷலிசமும் வேண்டாம்'' என்ற கோஷத்தைமுன்வைத்து ஈரான் மக்களை வழிநடாத்தியவர்; அன்றைய இந்தக் கோஷம் இன்று உலகின் எல்லா நாட்டு முஸ்லிம்களையும் விழிப்புறச் செய்துள்ளது. அவரது இஸ்லாமிய உணர்வும், அதனை உலகுக்குவெளிக் காட்டிய விதமும்-முஸ்லிம்கள் ஐக்கியப்பட்டால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை என்ற தன்னம்பிக்கையை முஸ்லிம் உலகுக்கு ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீ. ல. முஸ்லிம் காங்கிரஸும் இந்நாட்டு முஸ்லிம் சமூகத்தின் அடையாளத்தை உறுதிப்படுத்தவும், அதனைத் தொடர்ந்து பேணிக்கொள்ளவும், முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்கவும் போராடிவருகிறது. இலங்கை முஸ்லிம்களின் அபிலாஷைகளின் வெளிப்பாடாக முஸ்லிம் காங்கிரஸ் செயல்படுகின்றது.

80%க்கும் அதிகமான எமது நாட்டு முஸ்லிம்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்றார்கள். பொருளாதார ரீதியில் பின்னடைந்து பல இன்னல்களை அனுபவிக்கும் இலங்கை முஸ்லிம்களுக்கு உதவிசெய்யும் வழிவகைகளை ஆலோசிக்கும்படி கௌரவ அமைச்சர் அவர்களை தயவுடன் வேண்டிக்கொள்கிறோம். ஈரான் தனது நாட்டுப் புனருத்தாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ள இவ்வேளையில்-அப்பணியில் இலங்கை முஸ்லிம்களுக்கும் அதிகளவு வாய்ப்புக்களை வழங்கும் பட்சத்தில் எமது சமூகத்தின் வேலையின்மைப் பிரச்சினையை ஓரளவு தீர்க்க உதவுவதுடன், அதன் பொருளாதாரத்தை மேம்படவும் செய்யும். இதற்கான வழிவகைகளை அமைச்சர் மன்சூரி அவர்கள் மேற்கொள்வார்களென நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அமைச்சர் அவர்களையும், அவரது தூதுக்குழுவினரையும் ஸ்ரீ. ல. முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்பதுடன் அவர்கள் ஊடாக இலங்கை முஸ்லிம்களின் ஸலாத்துக்களையும், நல்வாழ்த்துக்களையும் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் சகோதரர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வைபவத்தில் ஈரானின் வெளிவிவகாரப் பிரதியமைச்சர் பேசுகையில்:

''இன்றைய உலக முஸ்லிம்களுக்குத் தேவை ஐக்கியமே. உலக முஸ்லிம்கள் அனைவரும் ஐக்கியப்படுவதன்மூலம் மட்டுமே இஸ்லாமிய ஆட்சியை உலகில் நிலைபெறச் செய்ய முடியும். மேற்கத்திய உலகம் இஸ்லாத்திற்கெதிரான சதிமானங்களையும், புரளிகளையும் காலத்திற்குக்காலம் திட்டமிட்டுச் செய்துவருகின்றது. அதனை முறியடிக்க முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும்''.

''இலங்கை முஸ்லிம்களது பிரச்சினைகள்பற்றி இங்கு கூறப்பட்டது. பொருளாதார ரீதியில் நாம் உதவக்கூடிய வழிவகைகளை ஆராய்வோம். வேலை வாய்ப்பு விடயத்தில் இயன்ற உதவியைச் செய்வோம்.''

இவ் வைபவத்தில் ஈரான் தூதுவராலயப் பொறுப்பதிகாரி பராஜி, முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் எம். ஸீ. எம். கலீல், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ், முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களான அல்ஹாஜ் என். எம். புஹார்தீன், அல்ஹாஜ் எஸ். எம். அபூபக்கர். மேல்மாகாண சபை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஜனாப் அமீர், பொதுச் செயலாளர் அல்ஹாஜ் எம். ஜே. ஏ. சகீத் உட்பட பலர் கலந்துகொண்டனர். இவ்வைபவம் அல்ஹாஜ் என். எம். புஹார்தீன் எம். பி. அவர்களின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டது.

அலி உதுமான் படுகொலை:

## எதிர்க்கட்சித் தலைவர் ஏற்கனவே மாகாண சபையில் எச்சரித்திருந்தார்!

வவுனியா மாவட்ட E.N.D.L.F. மாகாண சபை உறுப்பினர் கடத்திச் செல்லப்பட்டது தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண சபையில் கடந்த 8-6-89ல் கொண்டுவரப்பட்ட கண்டனப் பிரேரணைமீது எதிர்கட்சித் தலைவர் சகோ. எம். எச். சேகு இஸ்ஸதீன் பேசிய பேச்சிலிருந்து சில பகுதிகள்:-

★ இச்சபையின் உறுப்பினர் ஒருவருக்கு இந்த அசம்பாவிதம் நடந்திருக்கும்பொழுது - முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த சகோதரர்களையும் என்னையும் நினைக்கும்பொழுது கவலைப்பட வேண்டியவனாக இருக்கிறேன்.

★ ஏனைய கட்சிகளைச்சேர்ந்த ஒரு உறுப்பினர் கடத்தப்படுவதோ அல்லது கொல்லப்படுவதோ- முஸ்லிம் காங்கிரஸின் ஒரு உறுப்பினர் கடத்தப்படுவதற்கோ அல்லது கொல்லப்படுவதற்கோ சமமாகும் என்றே தான் நான் கருதுகிறேன்.

★ உறுப்பினர் சிவபாலராஜாவின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினர் அனைவருக்கும் இம் மாகாணசபை, தனது நிதியிலிருந்து போதுமான ஒரு தொகையை ஒதுக்கி அவரின் இழப்பால் அடைந்த நஷ்டத்தில் ஒரு பகுதியையாவது தீர்த்துதவ வேண்டுமென்று மாகாணசபையிடம் கேட்டுக்கொள்கிறேன்.

★ எமது மெய்ப்பாதுகாவலர்களுக்கு வழங்கப்படவேண்டிய

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசரகாலச் சட்டம்

# பிரச்சினைகளுக்குத் தீர்வல்ல !

— சகோ. எம். எச். எம். அஷ்ர.ஃ.ப் —

கடந்த ஜூன் 21ந் திகதி பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தின்போது, ஸ்ரீ. ல. மு. காங்கிரஸ் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட எம். பியுமான சகோ. எம். எச். எம்.அஷ்ரஃப் அவர்கள் ஆற்றிய உரை இங்கே பிரசுரிக்கப்படுகிறது.

கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, இன்று அவசர காலநிலை மீதான இந்த விவாதத்தில் பங்குபற்றும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் சந்தோஷப்படுகிறேன். பாராளுமன்றத்திற்குள் ஸ்ரீ. ல. மு. காங்கிரஸ் காலடி எடுத்து வைத்த நாளில் இருந்து - தினமும் இங்கு நடைபெறுகின்ற பேச்சுக்களையும், விவாதங்களையும் அவதானிக்கின்றபோது நாங்கள் ஸ்ரீலங்காவுக்குள் இருந்து கொண்டுதான் இந்தப் பேச்சுக்களைப் பேசுகிறோமா அல்லது வேறு ஒரு நாட்டுக்குள் இருந்து கொண்டு நாங்கள் விவாதங்களில் பங்கு கொள்கிறோமா என்று நான் அடிக்கடி யோசிப்பதுண்டு.

ஏனென்றால் பாராளுமன்றத்துக்குள்ளே வந்து நாங்கள் பேசுகின்ற பொழுது பாராளுமன்றத்துக்கு வெளியே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப்பற்றி அவதானமில்லாதவர்களாக நாங்கள் எங்களையே ஏமாற்றிக்கொண்டு போகின்ற ஒரு போக்கிலேயே விவாதங்களிலே நாங்கள் கலந்துகொண்டிருக்கின்றோம்.

இந்த நாடு சுதந்திரமடைந்த போது 1948 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சிறீ லங்கா சுதந்திரக் கட்சி உருவாக்கப்பட்டது. இந்த விவாதங்களை நாங்கள் கக்கையாளப்படுகின்ற ஒரு நிவாரணமாகும். 1983 ஆம் ஆண்டில் இருந்து 1989 ஆம் ஆண்டுவரை ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் நாங்கள் அவசரகால நிலையின் கீழ் இருந்திருக்கின்றோம். இதன் மூலம் இந்தநாட்டில்பிரச்சினைகளுக்குஎங்களால் தீர்வுகளைக் கொண்டுவர முடிந்ததா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்தபோதும் அவசரகால நிலையை வைத்திருந்தது. ஆகவே அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியபோதும் இந்நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண முடிந்ததா? இதையும் நாம் சிந்தித்துப் பார்கக வேண்டும். நான் அடிக்கடி சொல்வதைப் போன்று ஒரு கட்சி, ஆட்சியில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்காகவும் இன்னும் ஒரு கட்சி ஆட்சிக்கு வர வேண்டும் என்பதற்காகவும் தொடர்ந்து மாறி மாறி ஒருவரை ஒருவர் குறை கூறிக்கொண்டு இருப்பதனுல் பிரச்சினைகளைக் கூட்டிக்கொண்டு போவோமே ஒழிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டதாக வரலாறு இல்லை.

நான் இந்த அரசாங்கத்துக்கு ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். தயவுசெய்து இந்த நாடு எந்தத் திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்பதை மாத்திரம் எண்ணிப் பாருங்கள்.

பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கையற்ற சமுதாயமாக நடைபோட்டுக் கொண்டிருக்கின்றுர்கள் என்பதைத்தான் 1988 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனுதிபதித் தேர்தலில் வாக்களித்தமக்களின் 55 சதவீதம் காட்டுகிறது. இதில் 56 சதவீத மக்கள் தற்போதைய ஜனுதிபதி அவர்களை ஆதரித்தார்கள். இருந்தாலும் இந்த நாட்

நாங்கள் சிந்திய இரத்தமும் நாங்கள் இழந்த இழப்புக்களும் எங்களுக்குப் புதிய பாடங்களைக் கற்றுத்தர வேண்டும். அப்படியாகப் புதிய பாடங்களைப் படிப்பதற்கு- அந்த அனுபவங்களில் இருந்து நாங்கள் புதியதொரு நாட்டைக் கட்டி எழுப்புவதற்குத் தயார் இல்லை என்றுல் நாங்கள் இந்தப் பாராளுமன்ற ஜனநாயகத்தை இன்னும் எத்தனை நாட்களுக்குக் காப்பாற்றப் போகின்றோம் என்பது கேள்விக் குறியாக இருக்கின்றது. எனக்குத்தமிழ்ப் பாடல் ஒன்று இச் சந்தர்ப்பத்தில் ஞாபகத்திற்கு வருகின்றது அதாவது:

நாய்வாலை அளவெடுத்து<br>
நறுக்கித் திட்டின்<br>
நல்லெழுத் தெழுதும்<br>
எழுத்தாணியாமோ?

"ஒரு கட்சி ஆட்சியில் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதற்காகவும், இன்னுமொரு கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்பதற்காகவும் தொடர்ந்து, மாறி மாறி ஒருவரை ஒருவர் குறை கூறிக் கொண்டிருப்பதனுல் பிரச்சினை தீரப்போவதில்லை."

டிலே இருக்கின்ற மொத்த வாக்காளர்களில் 27.5 சதவீதத்தினர் மாத்திரம்தான் தற்போதைய ஜனுதிபதி அவர்களுக்கு வாக்களித்திருப்பதை நாங்கள அவதானிக்க வேண்டும்.



1988 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் புள்ளி விபரங்களை நீங்கள் எடுத்துப் பார்த்தால் மொத்தமாக 63.5 சதவீத மக்கள்தான் எல்லாக் கட்சிகளுக்கும் வாக்களித்திருக்கிறுர்கள். இதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அளித்த வாக்குகளை எடுத்துப் பார்த்தால் மொத்த வாக்காளர்களில் 82 சதவீத மக்கள் மாத்திரம்தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து இருக்கிறுர்கள். இது எதைக் காட்டுகின்றது எனிருல்-இந்த நாட்டின் ஒரு சக்தி விசேடமாக இளைஞர்கள், பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை அற்று விரக்தியுற்று ஆயுதங்களை

பேய்வாழும் சுடுகாட்டைப்<br>
பெருக்கித் தள்ளி<br>
தெருவிளக்கை ஏற்றிவிட்டால்<br>
வீடதாமோ?

என்று ஒரு தமிழ் புலவர் கூறினுர்.

இந்த நாட்டிலே ஏற்பட்ட இரத்த வெள்ளங்கள் எதுவும் ஆட்சியில் இருக்கின்ற கட்சிக்கோ, மூயன்ருல் ஆட்சிக்கு வர முடிகின்ற கட்சிக்கோ எந்தவிதமான படிப்பினைகளையும் அளிப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. நான் இன்று இந்த விவாதத்திலே சொல்ல முடிகின்ற முக்கியமான விடயம் என்னவென்ருல், அவசரகாலச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதால் மட்டும் நாங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது என்பதுதான். பிரச்சினைகள் எங்கேயோ இருக்கின்றன. இன்று அவசரகால நிலை ஏற்படுவதற்குக் காரணிகள் என்ன என்பதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். தாம் விரும்பியபோதெல்லாம் அவசரகால நிலையைப் பாவித்து அதன்மூலம் மக்களுடைய சுதந்திரமான உணர்வுகளைக் கட்டுப்படுத்துவது என்ருல்- மக்களுடைய அபிலாஷைகளைக் கட்டுப்படுத்துவது என்ருல் - மக்களுக்கெதிராக அராஜகத்தை அவிழ்த்து விடுவதுஎன்ருல் - அவசரகாலச் சட்டங்களால் எந்தவிதமான பிரயோசனமும் கிடைக்கமுடியாது. அது மாத்திரமல்ல, இங்கு 1983 லிருந்து 1989 ஆம் ஆண்டுவரையுமான காலகட்டத்திலேயே அவசர

"1983ல் இருந்து நாங்கள் அவசரகாலச் சட்டத்தின்கீழ் இருந்திருக்கிறோம். இதன்மூலம் இந்த நாட்டின் பிரச்சினைகளுக்கு எங்களால் தீர்வுகளைக் கொண்டு வரமுடிந்ததா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்."

அவதானிக்கின்றபொழுது இந்த நாட்டின் பிரச்சினைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரம் தான் தீாவு அல்லது சிறீ லங்கா சுதந்திரக் கட்சி மாத்திரம் தான் தீர்வு என்ற அடிப்படையில் நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். உண்மையிலேயே 1956ம் ஆண்டிலிருந்து இன்றுவரையில் இந்த நாட்டில் ஏற்பட்ட இரத்த வெள்ளங்களை, அனர்த்தங்களை நாங்கள் சிந்தித்துப் பார்க்கின்றபொழுது அழிவுகளைப்பற்றி நாங்கள் சிந்தித்துப் பார்க்கின்றபொழுது மனித உரிமை மீறல்களை நாங்கள் சிந்தித்துப் பார்க்கின்றபொழுது சிறீ லங்கா சுதந்திரக்கட்சியானது தான் பிடித்த முயலுக்குத்தான் மூன்று கால்கள் என்று கூறும் நிலையிலோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியானது, தான் சொல்லுவதுதான் சட்டம் என்ற நிலையிலோ சிந்தித்துக்கொண்டு இருக்குமாக இருந்தால் இந்த நாட்டின் பிரச்சினைகளுக்கு நாங்கள் ஒருபோதும் தீர்வுகாண முடியாது.

அவசரகால நிலை என்பது ஒரு தவிர்க்க முடியாத சூழ்நிலையிலேயே அரசாங்கம் நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கா

1947 ஆம் ஆண்டில் இருந்து 1988 ஆம் ஆண்டுவரை இந்த நாடடிலே நடைபெற்ற தேர்தல்களை நாங்கள் எடுத்துப் பார்க்கின்றபோது, 1947 ஆம் ஆண்டு 55 சதவீத மக்கள் மாத்திரம்தான் ஜனநாயகத்தில் - பாராளுமன்ற ஜனநாயகத்தில் - நம்பிக்கை கொண்டவர்களாக வாக்களித்திருந்தார்கள். 1977 ஆம் ஆண்டு இதே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது இது 86,7 சதவீதமாகக் கூடியது. இதே நாட்டில் 1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது 63 சதவீதமான மக்கள் தாம் வாக்களித்திருப்பதை மறந்துவிட முடியாது. 1977 ஆம் ஆண்டு 86 சதவீதமாகப் பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருந்த மக்கள் 1989 ஆம் ஆண்டு 63 சதவீதமாகக் குறைந்து இருக்கின்றுர்கள். இது எதைக் காட்டுகின்றது? இந்தப் பாராளுமன்றத்துக்குள்ளே இருக்கின்ற அரசாங்கக் கட்சிக்காரர்கள் என்றுலும் சரி, எதிர்க் கட்சிக்காரர்கள் என்றுலும் சரி, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் சரி, இந்த நாட்டின் ஒரு பகுதி மக்கள்

"1956ம் ஆண்டில் இருந்து 1989ம் ஆண்டு வரை நாங்கள் சிந்திய இரத்தமும், இழந்த இழப்புக்களும் எங்களுக்குப் புதிய பாடங்களைக் கற்றுத்தர வேண்டும். புதிய பாடங்களைப் படிப்பதற்கு — அந்த அனுபவங்களில் இருந்து நாங்கள் புதியதொரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாவிடின் — பாராளுமன்ற ஜனநாயகத்தை காப்பாற்றுவது கடினம்."

ஏந்திஉள்ளார்கள் என்பதைத்தான். இந்த நாட்டின் உற்பத்தி நிறுவனங்களுக்கு எதிராக இந்த நாட்டின் சட்டங்களுக்கு எதிராக அவர்கள் போராடும் நிலை ஒன்று ஏற்பட்டு இருப்பதை நாங்கள் காண்கின்றோம்.

நான் இந்த விவாதத்தில் சொல்ல வருகின்ற முக்கியமான விடயம் ஒன்றுதான். அது என்னவென்ருல் 1955 ஆம் ஆண்டில் இருந்து 1988 ஆம் ஆண்டுவரை

கால நிலை இருந்தபோது அவசரகாலச் சட்டத்தின் மூலம் என்ன நடைபெற்றது என்பதை நாம் சிந்திக்காமல் இருக்கமுடியாது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் விதிமுறைகளை உருவாக்குவதற்கு அரசாங்கத்திற்கும் ஜனுதிபதி அவர்களுக்கும் அதிகாரம் இருக்கின்றது. இவற்றைத் துஷ்பிரயோகம் செய்கின்றபொழுது இந்தத் துஷ்பிரயோகத்தால் ஏற்படுகின்ற விளைவு

7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுத் தேர்தல் விஞ்ஞாபனம்

## பொதுத் தேர்தல் -- பெப்ரவரி 15, 1989

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### காணிகளும் குடியேற்ற...

(v) காலா காலமாக வாழ்ந்து வந்த காணி நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்களை (அகதிகள் உட்பட) இனங்கண்டு, அவர்கள் எவ்வெப் பகுதிகளில் வாழ்ந்து வந்தார்களோ அதே பகுதிகளில் அம்மக்களைக் குடியிருத்தி புனர் வாழ்வு அளிக்கப்படுவர்.

(vi) இந்த நாட்டின் எப்பகுதியிலாயினும் சரி, காணி நிலத்தை கொள்வனவு செய்து, அங்கு வாழ்ந்து தமது ஜீவனோபாயத்தை கொண்டு செலுத்துவதற்கான உரிமையை எல்லா மக்களுக்கும் அளிக்கப்படும்.

(vii) மேற்கூறிய அம்சங்களின் அடிப்படையில் நிலப்பங்கீட்டையும், அவை சம்பந்தமான கொள்கையையும் நிர்ணயிப்பதற்கென சகல இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஒரு நில ஆணைக் குழு ஒன்று நிறுவப்படும்.

### பிரஜா உரிமை

(i) பிரஜா உரிமை சம்பந்தமாக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள் தொடர்ந்து அமுலில் இருக்கும். பிரஜா உரிமை சம்பந்தமாக பாராளுமன்ற அங்கீகாரம் பெற்ற சட்ட மூலங்கள் அனைத்தும் உடனடியாக நடைமுறைப் படுத்தப்படும்.

(ii) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பிரஜைகள் சம்பந்தமான சட்டத்தில் இருக்கும் முட்டுக் கட்டைகள் முற்றாக நீக்கப்படும்.

### இந்திய - இலங்கை உறவுகள்

இந்திய அரசாங்கத்துடன் ஒரு சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். இரு நாடுகளுக்கிடையே உள்ள உறவுகளைப் பலப்படுத்தவும், இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான யோசனைகளுக்கிணங்க இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் திருத்தங்கள் ஏற்படுத்துவதற்கு மேற்படி உடன்படிக்கை உதவும்.

### அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்

(i) நிறைவேற்று அதிகாரத்துடன் கூடிய ஜனாதிபதிப் பதவியை அகற்றி அமைச்சரவைக்கு சகல நிறைவேற்று அதிகாரங்களையும் வழங்கல்.

(ii) குறிப்பிட்ட சில கடமைகளை அளித்து அரசின் தலைவர் என்ற அடையாளச் சின்னமாக இருக்க ஒரு ஜனாதிபதியை உருவாக்கல்.

(iii) வம்சாவளியில் பிரஜாஉரிமை, பதிவுப்பிரஜா உரிமை என்ற பாகுபாட்டை நீக்கல்.

(iv) நாட்டின் சகல இன மக்களின் பிரதிநிதித்துவத்தை பாராளுமன்றத்தில் எதிரொலிக்கச் செய்ய விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் சீர்திருத்தம் செய்தல்.

(v) தற்போது அமுலில் இருக்கும் வெட்டுப்புள்ளி வீத முறையும் மாவட்டத்திற்கான மேலதிக ஆசன முறையும் நீக்கப்படும்.

(vi) மக்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்துவது கட்டாயக்கடமையாக்கப்படும்.

(vii) நீதித்துறையினரால் சட்ட மூலங்களை மீளாய்வு செய்யும் முறை உண்டாக்கப்படும்.

(viii) குடியரசின் இரண்டாவது அரசியலமைப்பில் (1978) உள்ள அடிப்படை உரிமைகள் சம்பந்தமான விதிகள் அனைத்தும் மீண்டும் மீயுயர் சட்டமாக்கப்பட்டு எக்காரணத்தையிட்டும் மட்டுப்படுத்த முடியாத முறையில் பேணப்படும்.

(ix) அடிப்படை உரிமை மீறல் சம்பந்தமாக சாதாரண மனு ஒன்றைத் தாக்கல் செய்து உயர் நீதிமன்ற நியாயாதிக்கத்தின் விசாரணையைக் கோரும் உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் இருக்கும்.

### வெளிநாட்டுக் கொள்கை

(i) இலங்கையின் சுதந்திரத்தையும், இறைமையையும், பிரதேச சுதந்திரத்தையும்பாதுகாக்கக்கூடிய காத்திரமான அணிசேரா அம்சத்தை உள்ளடக்கிய வெளிநாட்டுக்கொள்கை வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

(ii) நாட்டின் அபிவிருத்தித்திட்டங்களை அமுல்செய்வதற்கு எல்லா நாடுகளில் இருந்தும், சர்வதேச கடன் வழங்கும் ஸ்தாபனங்களில் இருந்தும் பொருளாதார உதவி, நிதிஉதவி மற்றும் ஏனைய உதவிகளையும் பெறுவதற்கு அரசாங்கம் வேண்டிய முயற்சிகளை எடுக்கும்.

(iii) அ) 'சார்க்' அணி, ஐ.நா. சபை, மற்றும் ஏனைய சர்வதேச ஸ்தாபனங்கள் ஆகியவைகளில் தீவிரமாக பங்குபற்றி முன்னணியில் நிற்க முயற்சி எடுக்கப்படும்.

ஆ) அண்டை நாடுகள் அனைத்துடனும் நட்புறவுகளை நிலைநாட்ட அரசாங்கம் முயற்சிக்கும்.

iv) ஒரு நாட்டின் மீது இன்னுமொரு நாடு எடுக்கும் சகல விதமான அக்கிரமிப்பு முயற்சிகளுக்கு எதிராக குரல் எழுப்பப்படும்.

(v) சகல பின்தங்கிய நாடுகளும் பயன் அடையக்கூடிய முறையில் ஒரு உலகளாவிய வறுமை ஒழிப்புத் திட்டத்தை உருவாக்குமாறு ஐ.நா. சபைக்கு அரசாங்கம் ஆலோசனை கூறும்.

(vi) இஸ்ரேலின் நலன் காக்கும் பிரிவு உடனடியாக மூடப்பட்டு இஸ்ரேலுடன் இருக்கும் சகல அரசுத் தொடர்புகளும், பொருளாதாரத் தொடர்புகளும் உடனடியாக துண்டிக்கப்படும்.

(vii) வெளியே இயங்கிவரும் பலஸ்தீன அரசையும், பலஸ்தீன அரசு ஒன்று உருவாக்கப்பட்டு இயங்குவதற்கான உரிமையையும் ஏற்று அங்கீகரிக்கும் அதே வேளையில் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு மேலான ஆதரவை ஐயந்திரிபற தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தப்படும்.

(viii) அ) வெளிநாடுகளுக்கு இலங்கைப் பிரதி நிதிகளாகச் செல்லும் அனைவரும் திட்டவட்டமாக தகைமையின் அடிப்படையில் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஆ) வெளிநாட்டு தூதுவப் பணிகளுக்கு, சிறந்த நிர்வாகத் திறமையும், பரந்த கல்வித் தகைமையும், உயர்ந்த ஒழுக்க சீலமும் கொண்டவர்கள்தான் அனுப்பப்படுவர்.

### விசாரணைக் குழுக்கள்

(i) இன்று நாட்டில் நிலவி நிற்கும் நலிவுகளை நன்கறிந்து அவற்றிற்கான காரணங்களை புரிந்து கொள்ளும் நோக்கத்திற்காக, 1948ல் இருந்து இற்றைவரை பதவியில் இருந்த சகல அரசாங்கங்களினது தவறான நடவடிக்கைகள் அனைத்தையும் ஆராயு முகமாக ஏக காலத்தில் பல்வேறு தரப்பட்ட விசாரணைக் குழுக்கள் அமைக்கப்படும்.

(ii) ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்காக இந்த விசாரணைக் குழுக்களின் சிபார்சுகளும், யோசனைகளும் கவனத்துக்கு எடுக்கப்பட்டு அவற்றை நடைமுறைப் படுத்த தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(iii) 1948 தொடக்கம் அரச கருமங்களுக்குப் பொறுப்பாய் இருந்தவர்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறுதல்களுக்காக எந்த வித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட மாட்டாது என விசேஷ உத்தரவாதம் அளித்து அத்தவறுதல்களில் இருந்தும் அவர்களுக்கு விடுபாடும் அளிக்கப்படும்.

### அடிப்படைத் தேவைகள்

ஒவ்வொருவரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வண்ணம் அதற்குரிய வாய்ப்பு வசதிகளை வழங்குதல் அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். அவற்றை தொழில் வாய்ப்பு மூலமோ அல்லது தேவையான பண்டங்களை வாங்குவதற்கான பத்திரங்களை இலவசமாக வழங்குதல் மூலமோ நடைமுறைப்படுத்தலாம். அடிப்படைத் தேவைகள் என்பது சாதாரணமாக இந்நாகரீக உலகிலே மக்களுடைய அன்றாட வாழ்க்கைக்கு தேவையான அத்தனை பொருட்களையும், வசதிகளையும் உள்ளடக்கும். ஆனல் டாம்பீகமான வாழ்வுக்குரிய தேவைகளை உள்ளடக்காது. டாம்பீகத் தேவை என்பது அத்தியாவசிய மற்றதும் ஒவ்வொருவருக்கும் வழங்க முடியாத ஒரு பொருளாகும்.

அடிப்படைத் தேவைகள் என்பது:

(i) உணவு - உடல் நலத்துக்குரிய தாகவும், போஷாக்கானதும் தேவையான அளவுகளிலும் இருக்கும்.

(ii) உடை - தட்பவெப்ப நிலைக்கேற்ற தாயும், உடைதரிப்போரின் தொழிலுக்கேற்றதாயும் இருக்கும். தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்ப உடை வழங்க எத்தனிக்கப்படும்.

(iii) உறையுள் - சுத்தமாகவும், குடும்பத்து தேவையை ஒட்டிய வீட்டுவசதி, (தனிநபர் விருப்பங்களுக்கு ஏற்பவீட்டு வசதி வழங்க முடிந்தவரை முயற்சி எடுக்கப்படும்)

(iv) மருத்துவ சேவைகளும், மருந்துகளும்.

(v) குறைந்த பட்ச கல்வி வசதி நிர்ணயிக்கப்படும். ஒருவர் எவ்வளவு தூரம் கற்க விரும்புகிறாரோ அவ்வளவு தூரம் கல்வி வசதி வழங்கப்படும். புத்தகங்களும், மற்றும் கல்வி சம்பந்தமான சகல உபகரணங்களும் (தட்டச்சு இயந்திரம், ஓவியர் உபயோகிக்கும் பெயின்ற், தூரிகை ஆகியவை உட்பட) வழங்கப்படும்.

vi) போக்கு வரத்து

vii) பிரயாணம்

viii) பொழுது போக்கு நிகழ்ச்சிகள்

மேற்கூறிய அடிப்படைத் தேவைகள் தங்கு தடையின்றி எல்லா மக்களுக்கும் கிடைப்பதற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கும்.

### சமூக நலன்

) பொதுத் துறையும் தனியார் துறையும் உணவுப் பொருட்கள் ஏனைய பாவனைப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்திப் பெருக்கத்தை அதிகரிக்கும். இதற்கு வேண்டிய ஆலைகளும், உற்பத்தி சாலைகளும் உடனடியாக தோற்றுவிக்கப்படும்.

(ii) அனாதைகள், விதவைகள், வலது குறைந்தோர் ஆகியோரின் நலத்தை பேணுவதற்காக விசேஷமான காப்புறுதித் திட்டம் ஒன்றை அரசாங்கம் வகுக்கும்.

iii) விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள், கமத்தொழிலில் ஈடுபடுவோர், மீன்பிடித் தொழிலாளர்கள், கமத்தொழிலில் ஈடுபடுவோர், மீன்பிடித் தொழிலாளர் போன்ற, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை நல்கி, நிலையான வருமானத்தை பெறுவதற்கு எந்தவித உத்தரவாதமும் இன்றித் தவிக்கும் தொழிலாளர் மக்களுக்கென ஒரு ஓய்வூதியத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

### பொருளாதாரம்

(i) சட்ட ரீதியான தனிநபர் சொத்துரிமை பேணப்பட்டு, தனது சொத்தை உடைமையாக்கி, ஆண்டு அனுபவித்து, பரிவர்த்தனை செய்யக்கூடிய உரிமைகள் பாதுகாக்கப்பட்ட போதிலும், தேவைகள் மிக்க ஏழைகளின் நலன்கருதி தார்மீக அடிப்படையில் எல்லாச் சொத்துக்களும் பொதுச் சொத்துக்களாகக் கருதப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் உலகம்

## பவாஸ்

"முஸ்லிம் உலகம்'' என்று கூறப்படுவது உலகில் உள்ள முஸ்லிம் நாடுகளும் முஸ்லிம் அல்லாத நாடுகளில் உள்ள முஸ்லிம் களையுமே.

இந்த முஸ்லிம் உலசம் மேற்கே அமெரிக்காவிலிருந்து கிழக்கே மிகச் சிறிய குட்டி நாடான புருணிவரையும் ,வடக்கே சீனுவிலிருந்து தெற்கே மாலைதீவுவரையும் பரந்திருக்கும் முஸ்லிம்களையும், முஸ்லிம் நாடுகளையும் குறிக்கும்.

ஆனல் முஸ்லிம் பத்திரிகைகள் தவிர,முஸ்லிம் அல்லாத நாடுகளோ பத்திரிகைகளோ 'முஸ்லிம் உலகம்' என்று கூறுவதில்லை;

முஸ்லிம் நாடுகளில் எதுவுமே தனக்கென்று சுற்றிலும் ஒரு சுவரைப் போட்டுக்கொண்டு தனித்து வாழவில்லை; வாழவும் முடியாது. தூர கிழக்கில் இரண்டு லட்சம் மக்களைக் கொண்ட சின்னஞ்சிறிய புருணி உட்பட முஸ்லிம் நாடுகள் அனைத்தும் வெளி உலகத் தொடர்புகள் உடையவைதாம். முஸ்லிம் அல்லாத நாடுகளில் உள்ள முஸ்லிம்களும் அந்நாடுகளின் நடப்புகளோடு பிணைப்புண்டவர்கள்தாம்.

எனவே முஸ்லிம் உலகுக்கு வெளியேயும் உள்ளேயும் நிகழும்-நிலவும் அரசியல், பொருளாதார இராணுவ, சரித்திர நிலைமைகள் முஸ்லிம் உலகத்திலும் தாக்கத்தை உண்டாக்கவே செய்கின்றன. அதனல் முஸ்லிம் உலகைப்பற்றி எழுதும்போது, அதற்கு வெளியேயும் நிகழும் விஷயங்களின் தொடர்பையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

இந்த வகையில் பார்க்கும்போது முஸ்லிம் நாடுகளையும் உள்ளடக்கியுள்ள மூன்றும் உலகைப் பாதித்துள்ள கடுமையான பொருளாதார நெருக்கடிகளை - அதன் பாரதூரமான விளைவுகளை முதலில் இங்கே கூறவேண்டியுள்ளது.

முதலாளித்துவ நாடுகள், சோஷலிச நாடுகள் இவை இரண்டையும் தவிர்த்து ஏனைய நாடுகள் மூன்றும் உலகம் என்றும், வளர்முக நாடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. மூன்றும் உலகில் வறிய,அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அடங்கும். அதாவது ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க, மத்திய அமெரிக்க நாடுகளைக் குறிப்பிடலாம். இவற்றுள் முஸ்லிம் நாடுகளும் சேர்க்கப்பட்டவையாகும்.

### ★ பாரிய கடன் சுமை

இம்மூன்றும் உலகம் இன்று பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளன. இந்த நெருக்கடிகளில் பிரதானமானது தலையை நசுக்கும் பிரமாண்டமான கடன் சுமையாகும்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற ஏகாதிபத்திய பெருமுதலாளித்துவ ஏஜெண்டுகளான மாபெரும் நிதிநிறுவனங்களிலிருந்து மூன்றும் உலகம் பல லட்சம் கோடிக்கணக்கில் கடன் பெற்றுள்ளன. இவற்றுள் முஸ்லிம் நாடுகளும் அடக்கம். கடன் தொகையில் இந்தோனேஷியா ஐந்தாவது இடத்தைப் பெற்றிருப்பது இங்கு சுட்டிக்காட்டியதாகும். அது 17,000 கோடி ரூபா கடனில் மூழ்கித் தத்தளிக்கிறது. கட்டித் தொலைக்க வேண்டிய வட்டி இத்தொகையில் சேர்க்கப்படவில்லை. அதையும் சேர்த்தால் கடன் தொகை இன்னும் கூடுதாயிருக்கும்.

மூன்றும் உலகம் போலவே, அதனைச் சேர்ந்த முஸ்லிம் நாடுகளும் தமது அபிவிருத்திக்காகவே, கடன் பெற்றிருந்தாலும், இந்த நோக்கத்துக்காக மட்டுமே இது செலவிடப்படவில்லை. விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், போக்குவரத்து, வீடமைப்பு, கல்வி, வேலைவாய்ப்பு, ஆராய்ச்சி, பொதுச் சுகாதாரம் போன்ற மற்றும் அபிவிருத்தித்திட்டங்களுக்கு செலவிட்டதிலும் பார்க்க ஆயுதங்களுக்குத்தான் கூடுதலாகச் செலவிட்டுள்ளன.

### ★ ஆயுத வியாபாரம்

ஏகாதிபத்திய வல்லரசுகளின் இன்றைய ஜீவ நாடியான வியாபாரம் ஆயுத விற்பனையாகும். கொள்ளை இலாபம் தரும் இவ்வியாபாரத்துக்கு மூன்றும் உலகம் பெரும் சந்தையாக உள்ளது. ஐ.நாவின் மதிப்பீடுகளின்படி மூன்றும் உலக நாடுகளது ஆயுதப் படைகள் 11 பில்லியனையும் தாண்டுகிறது. இது உலக இராணுவ பலத்தில் ஏறத்தாழ அரைவாசியாகும். அவற்றின் பராமரிப்புச் செலவு 100-200 மில்லியன் டாலராகும். நமது ரூபாய்க்கணக்கில் 51 ஆயிரம் கோடிக்கும் மேல்.

1982 ஆண்டில் மட்டும் மூன்றும் உலக நாடுகள் ஏறக்குறைய 28 மில்லியன் டாலர்களுக்கு ஆயுதம் வாங்கின. கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்காவிடமிருந்தும் அதன் நேட்டோ நாடுகளிடமிருந்தும் 209 மில்லியன் டாலர்களுக்கு ஆயுதங்களைக் கொள்வளவு செய்தன. பிரதான ஆயுத இறக்குமதி சவூதி அரேபியா, எகிப்து, லிபியா, இந்தியாவாகும். இந்தியாவைத் தவிர்த்தால் மற்ற மூன்றும் முஸ்லிம் நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுமட்டுமல்ல, விலைகளும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் ஒரு டாங்கியின்விலை நான்கு மடங்காகவும், தரையிலிருந்து ஆகாயத்துக்குச் செலுத்தப்படும் ஏவு கணையின் விலை இரண்டு மடங்காகவும் அதிகரித்தது.

ஏகாதிபத்திய வல்லரசுகள் ஆயுத விற்பனையோடு மட்டும் நின்று விடுவதில்லை. மூன்றும் உலக நாடுகளின் பலவீனங்களையும் முரண் பாடுகளையும் பயன்படுத்தி ஆயுதக் கொள்வனவுக்கு ஊக்கம் அளித்துவருகின்றன. முஸ்லிம் நாடுகளுக்கிடையே நிலவும் சகோதர முரண்பாடுகளைப் பகை முரண்பாடுளாக்கி தீமூட்டுகின்றன. அவற்றின் பிராந்தியங்களில் மோதல்களையும் பதற்றநிலையையும் உருவாக்குகின்றன. ஈரான்-ஈராக் யுத்தம் ஓர் உதாரணம். ஈரான்-ஈராக் மோதல் நீடித்திருப்பதற்கும், தமது ஆயுதச் சந்தையை நிலையாக வைத்துக் கொள்வதற்கும் இந்த இருநாடுகளையும் சுரண்டுவதற்கும் தமக்கு அப்பாற்பட்ட மார்க்கங்களை எல்லாம் பின்பற்றின. 1982-88க்கும் இடையே ஈரானின் தங்க நாணய இருப்புக்கள் ஆறு மடங்கு குறைந்தது. அதன் வெளிநாட்டுக் கடன் 20 மில்லியனிலிருந்து 75-80 மில்லியன் டாலர்களுக்கு உயர்ந்தது. அதன் ஏற்றுமதி அரைவாசியால் குறைந்தது. மக்கள் தேவைகளுக்கான இறக்குமதி நான்கு மடங்குகளால் வெட்டிக்குறைக்கப்பட்டது. ஏனைய பொருளாதார இலக்குகளும் மோசமாயின. ஈரானும் ஈராக்கும் அடைந்த பொருளாதார நட்டம் ஏறத்தாழ 500 மில்லியன் டாலர்கள். ஆயுதவிற்பனையில் கொடி கட்டிப் பறக்கும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் நிபந்தனைகள் வேறு விதிக்கின்றன. தங்களிடம் மட்டுமே இவற்றை வாங்கவேண்டும். குறிப்பிட்ட சிலஆயுதங்களைமற்றையநாடுகளிடம் வாங்கக்கூடாது. உற்பத்தி செய்யக்கூடாது என்ற நிபந்தனைகள். இலாபம் மட்டுமின்றி ஆயுத விஷயத்தில் எப்போதும் தம்மையே சார்ந்திருக்கவேண்டும்என்பதே இந் நிபந்தனையின் நோக்கம். சொல்லப்போனல் நாடுகளின்உள் விவரங்களில் தலையிடல் என்பதே இதன் பொருள்.

கடந்த வருடம் ஆயுதக் கொள்வனவின் விலையில் சவூதி அரேபியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே சிறு பிரச்சினை எழுந்தது. அதனல் குறுகிய வீச்சு ஏவுகணைகளை அமெரிக்காவிலும் பார்க்க குறைந்த விலையில் சீனுவிடம் பெற்றபோது அமெரிக்கா ஆட்சேபித்தது. பாகிஸ்தான் சொந்தமாக ஓர் அணு உலையைக்கடந்த வருடம் நிறுவியபோது அமெரிக்கா தனது கண்டனத்தைத்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# காற்று வெளியினிலே...

## வானம்பாடி

● சமீபகாலமாக அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் நாட்டின் தற்போதைய நெருக்கடி பற்றி எதுவித கருத்தும் பரிமாறிக் கொள்ளாமல் ஒதுங்கி இருக்கின்றனராம். புத்தகங்கள் வாசிப்பதிலும், தமது வழமையான நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலும் தமது நேரத்தைச் செலவழிக்கின்றனராம் 'கரண்ட் 'டொபிக்குகளை'ப்பற்றிக் கதைப்பதில்லையென்று முடிவெடுத்திருக்கிறர்களோ என்னவோ!

* * *

● அண்மையில் 'ஈரோஸ்' பிரமுகர்கள் குழுவொஸ்று முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடத்தைச் சந்தித்ததாம். அச் சந்திப்பின்போது, முஸ்லிம் காங்கிரஸை மட்டுமே இலங்கை முஸ்லிம்களின் உரிமைக் குரலாக - ஏக பிரதிநிதியாகத் தாங்கள் அங்கீகரிப்பதாகவும் தெரிவித்த அக்குழு, கடந்த பொதுத் தேர்தலின்போது வடபகுதி முஸ்லிம் மக்களின கணிசமானேர் தம்மை ஆதரித்தனர் என்றும் மேலும் தெரிவித்ததாம்.

* * *

● அரசியல் பழிவாங்கல் காரணமாக, ஏரிக்கரைப் பத்திரிகையொன்றின் அரசியல் பீடத்திலிருந்து வேறு துறைக்கு மாற்றப்பட்ட அந்தப் பத்திரிகையாளர், புதிய வேலைக்குச் செல்லாமல், தனது 'பார்வை'யை அகலப் படுத்தும் முகமாக புதிய செய்திப் பத்திரிகையொன்றை ஆரம்பித்து அதனை வெற்றியுடன் நடாத்தி வருகின்றராம். எதுவித அரசியல் தலையீடும் இன்றி - சுதந்திரமாகத் தனது கருத்துக்களை வெளியிடவும் - எல்லாப் பக்கத்துச் செய்திகளையும், நடுநிலையோடு பிரசுரிக்கவும் - இப்போதுதான் வாய்ப்புக் கிடைத்திருப்பதாகவும் தன்னைச் சந்திக்க வருவோரிடம் கூறிச் சந்தோஷப்படுகிறராம்.

* * *

● கடந்த பொதுத் தேர்தலில் கிழக்கில் யூ.என்.பி.யின் சார்பில் போட்டியிட்டுத் தோல்வி கண்ட அந்த அரசியல்வாதி, தனது புதிய அரசியல் பதவியைப் பயன்படுத்தி - தனது கிராமத்திலுள்ள பாடசாலையொன்றின் அதிபரை இடமாற்றம் செய்யச் சாக்குப்போக்குத் தேடிக்கொண்டிருக்கிறராம். தனது அரசியல் 'அடிவருடி'களில் ஒருவரை அதிபராக நியமிப்பதன் மூலம், அப்பாடசாலையைத் தனது அரசியல் 'யாகசாலை'யாக மாற்றுவதற்கு நினைக்கின்றராம். அதேவேளையில் நிலையான கொள்கையில்லாத, எப்போதும் அரசியல் தடுமாற்றமுடைய ஒருவர் அப்பாடசாலையின் அதிபர் பதவியில் கண்வைத்து மீண்டும் இந்த அரசியல்வாதியின் காலடிக்குச் 'சலா'மடிக்குப் முயற்சியில் ஈடுபட்டுள்ளாராம். அப்பாடசாலையின் தற்போதைய அதிபர் கடும் உழைப்பையும், நிர்வாகத் திறமையையும் கொண்டிருப்பதால் - அவரை இலகுவாக இடமாற்றம் செய்வது கடினம் என்றும் பேசிக்கொள்ளப்படுகிறது.

* * *

● காய்க்கின்ற வரம் மரத்திற்கு மட்டும்தான் உண்டு. அதனல்தான் அது கல்லடி படுவதற்கு இலக்காகின்றது. அது இயற்கையும்கூட அவ்வாறே முஸ்லிம் காங்கிரஸ் என்ற மரத்திற்கும், அதன் தலைமைப் பீடத்திற்கும் கல்லடிக்குப் பதிலாக விமர்சனம் என்ற போர்வையின்கீழ் 'சொல்'லடி 'செய்வதற்கு காலத்திற்குக் காலம் 'போர்வை போத்திய' சிலரால் ஒரு கூட்டம் உருவாக்கப்படடு வந்திருப்பது யாவரும் அறிந்த விடயம். இப்பணிக்காக அக்கூட்டத்திற்கு போதிய ஊதியமும் வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. ''ஊழிக் காற்றுக்கே அசையாத இந்த 'மரம்' ஊர்க்குருவிகளின் கூச்சலுக்கா அசையப் போகின்றது'' என்று காங்கிரஸ் அபிமானிகள் மத்தியில் பேசிக் கொள்ளப்படுகிறதாம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்க் அமைப்பு நாடுகளிடையே இந்தியா ஒரு பொலிஸ்காரனு?

தெற்கு ஆசிய நாடுகளான இலங்கை, இந்தியா, மாலைதீவுகள், பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் ஆகியவை தங்களிடையே விவசாய, மூலவளங்களை அபிவிருத்தி செய்யும் வகையில் சார்க் (SAARC) என்ற கூட்டமைப்பை நிறுவியுள்ளதுடன் அந்நாட்டுத் தலைவர்களைக் கொண்ட வருடாந்த உச்சி மாநாடுகளையும் நடாத்தி வருகின்றன. அடுத்த உச்சிமாநாடு எதிர்வரும் நவம்பரில் இலங்கையில் நடக்க உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இவ்வமைப்பு நாடுகளிடையே இந்தியா சனத்தொகை ரீதியிலும், இராணுவ ரீதியிலும், புவியியல் ரீதியிலும் ஒரு பலம் பொருந்திய நாடாகத் திகழ்வதால், அது இவ்வமைப்பு நாடுகளிடையே ஒரு பொலிஸ்காரனாக நடந்து வருவதாக ஒரு பொதுவான குற்றச்சாட்டு பரவலாகப் பேசப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டு ஒரு புறம் இருக்க, இந்நாடுகளின் வருமான வளம், சனத்தொகை, இராணுவ பலம் இங்கு ஒப்பிடப்படுகிறது.

## இலங்கை

| | |
|---|---|
| - மொத்த உள்நாட்டு உற்பத்தி (1987) | 6.68 பில்லியன் டொலர் |
| - பாதுகாப்புச் செலவு | 583.29 மில்லியன் டொலர் |
| - சனத்தொகை | 16,368,000 |
| - மொ. ஆயுதப்படை (25000 ரிசேர்வ் உட்பட) (TOTAL ARMED FORCES) | 48,000 |
| - இராணுவம் (ARMY) | 40,000 |
| - விமானப்படை (AIR FORCE) | 3,700 |
| - கடற்படை (NAVY) | 5,500 |

இலங்கை இராணுவத்திடம் உள்ளவை: ஏனைய போர்க் கருவிகளைவிட, 160 கவச வண்டிகள் (ARMED PERSONNEL CARRIERS) 50 இழுத்துச் செல்லக்கூடிய பீரங்கிகள் (TOWED ARTILLERY GUNS) ஒரு தொகையான ஷெல் தாக்கி மோட்டார்கள், 24 94MM துப்பாக்கிகள்.

## ஒரே பார்வையில் சார்க் அமைப்பு நாடுகளின் இராணுவ பலம்

இலங்கை கடற்படையிடம் உள்ளவை: 24 ரோந்துப் படகுகள், 2 தரையிலும் நீரிலும் செல்லக்கூடிய படகுகள், 6 துணைக் கப்பல்கள் (SUPPORT SHIPS).

ஆகாயப்படையிடம் உள்ளவை: 27 பெல் (BELL) ஹெலிகொப்டர்கள், AN - 12 ரிலி ஹெரோன் (RILEY HERON) வகையைச் சேர்ந்த போக்குவரத்து விமானம். இதனது பாராதுருப்புகள் படையில் (PARA MILITARY) 21000 பொலிஸாரும், 18000 ஊர்காவல் படையும் உண்டு. (ஏறத்தாழ 50000 முதல் 70000 வரையிலான இந்திய அமைதிப்படையும் உண்டு)

## பங்களாதேஷ்

| | |
|---|---|
| - மொ. உள்நாட்டு உற்பத்தி (1986/87) | 17 03 பில்லியன் டொலர் |
| - பாதுகாப்புச் செலவு | 216.75 மில்லியன் டொலர் |
| - சனத்தொகை | 106,554,000 |
| - மொ. ஆயுதப் படை | 101,500 |
| - இராணுவம் | 90 000 |
| - கடற்படை | 7500 |
| - விமானப்படை | 4000 |

இராணுவத்திடம் உள்ளவை: 20 பிரதான யுத்த டாங்கிகள், 40 கனரகமறற டாங்கிகள் (odd light tanks) 50 ஷெல்தாக்குதல் மோட்டார்கள், 68 அக் - அக் துப்பாககிகள் (Ack - Ack guns). கடற்படையிடம் உள்ளவை: 3 விரைந்து செல்லும் கப்பல்கள் (Frigates) 4 ஏவுகணைப் படகுகள் (Missile craft) 11 கரையோரப் பாதுகாப்பு வாகனங்கள் (Coastal Vehicles) 13 ரோந்துப் படகுகள், ஏனைய பலவகைப் படகுகள்.

ஜெனரல் இர்ஷாத்தின் விமானப்படை 7 பிரிவுகளைக் கொண்டது. அவை பத்து 21MF மிக் (MIG) விமானங்களையும், 15 பெல் ஹெலிஹொப்டர்களையும கொண்டது. பாராமிலிட்டரிப்படை 30000 திறமையான பங்களாதேஷ் ரைபிள் வீரர்களையும், 20000 அன்ஸாரிகளையும் 5000 திறமைவாய்ந்த ஆயுதப் பொலிஸையும் உள்ளடக்கியது.

## பாகிஸ்தான்

| | |
|---|---|
| - மொ. உள்நாட்டு உற்பத்தி (1986/87) | 32.08 பில்லியன் டொலர் |
| - பாதுகாப்புச் செலவு (1988/9) | 2.74 ,, டொலர் |
| - சனத்தொகை | 102,844,000 |
| - மொத்த ஆயுதப்படை | 480,600 |
| - இராணுவம் | 450,000 |
| - கடற்படை | 16,000 |
| - விமானப்படை | 17,600 |

பாகிஸ்தான் இராணுவத்தில் உள்ளவை: ஏனைய போர்க் கருவிகளுடன் 1600 பிரதான யுத்த டாங்கிகள், 800 கவச வண்டிகள்' 300க்கும் மேற்பட்ட இழுத்துச் செல்லத்தக்க பீரங்கிகள், 100 ஸ்ரிஞ்சர் ஏவுகணைகள் (Stinger Missiles) 144 RBS - 70 வகைஏவுகணைகள், 20 ஹெலிகொப்டர்கள், 40 அவதானிப்பு விமானங்கள், 60 தொடர்பு விமானங்கள் (Liaision planes)

கடற்படையில் உள்ளவை: 6 சப் மெரின்கள் (Sub-marrines) 8 நாசகாரிக் கப்பல்கள் (destroyers), 8 ஏவுகணைக் கப்பல்கள், 12 ரோந்துப் படகுகள், 4 நீர்மூழ்கிக் கப்பல்கள் (torpedo craft) 13 ஏனைய கரையை அண்டிய கப்பல்கள் (inshore ships) 3 கண்ணிவெடிகளை அகற்றும் கப்பல்கள் ( minesweepers). இதன் கடற்படை பொதுவான ஒரு யுத்த அணியையும், ஒரு ஹெலிகொப்டர் அணியையும் கொண்டுள்ளது. மேலும் 6 வெஸ்ட் லண்ட் சி கிங்ஸ்களும் (west land sea Kings) 6 அட்லாண்டிக் ஏரோபிளேன்களும் (Atlandic aeroplanes) இதன் பிரதான துணைகளாக உள்ளன.

விமானப்படையில் உள்ளவை: 62 மிராஜ் 5 விமானங்கள் 16 மிராஜ் 111 Em விமானங்கள் 13 மிராஜ் 111 Rm விமானங்கள் 39 F - 16S, 170 J - 6 விமானங்களைக் கொண்ட 25 படைப்பிரிவு இதனிடத்தில் உண்டு. அத்துடன் போட் சைட்வைன்டரும் (Boat side winder) ம் எக்ஸோசெட் ஏவுகணையும் (exocet missiles) உண்டு. பாராமிலிட்டரி படை 7500 தேசிய காவல் படையையும், 65000 உறுதிமிக்க எல்லைக் காவல் படைகளையும் (FRONTIER CORpS) 15000 வனப்பாதுகாப்புப் படையையும் (Rangers) 7000 லைட்இன்பன்றி (Nothern light infantry)யையும் கொண்டுள்ளது.

## இந்தியா

| | |
|---|---|
| - மொ. உள்நாட்டு உற்பத்தி (1987/8) | 253.88 பில்லியன் டொலர் |
| - பாதுகாப்புச் செலவு (1988/9) | 9.83 பில்லியன் டொலர் |
| - சனத்தொகை | 799 727,000 |
| - மொ. ஆயுதப்படை | 1.362,000 |
| - ரிசேர்வ் (இராணுவம்) | 200,000 |
| எல்லைஇராணுவம் TeritorialArmy | 40,000 |
| - இராணுவம் | 1,200,000 |
| - கடற்படை | 52.000 |
| - விமானப்படை | 115,000 |
| - விமானப்படை | 2,000 |

இந்திய இராணுவத்திடம் உள்ளவை: 3150 பிரதான யுத்த டாங்கிகள் 100 கனரகமற்ற டாங்கிகள், ஏறத்தாழ 2165 இழுத்துச் செல்லக்கூடிய பீரங்கிகள், 99 ஹெலிகொப்டர்கள் 1000க்கும் மேற்பட்ட ஷெல் தாக்குதல் மோட்டார்கள், 700 'ஒட் கொம்பற் (odd Combat) வாகனங்கள் 100க்கும் மேற்பட்ட விசேட பீரங்கிகள், எண்ணற்ற தரை ஏவுகணைகள் -Surface to Air Missiles- இன்னும் பல.

இந்திய கடற்படை, 2 விமானந்தாங்கிக் கப்பல்கள் உட்பட, 5 நாசகாரிக் கப்பல்களையும், 24 நீர்மூழ்கிக் கப்பல்களையும், 13 ஏவுகணைக் கப்பல்களையும், 17 கண்ணிவெடிகளை அகற்றும் கப்பல்களையும், ஒரு அணுஆயுத சப்மெரினையும் -Nuclear Submarrine- 13 சாதாரண சப் மெரின்களையும் 10 தரையிலும் நீரிலும் செல்லக்கூடிய படகுகள் உட்பட விமான, ஹெலிகொப்டர் பிரிவுகளையும் கொண்டிருக்கிறது.

இந்திய விமானப்படை ஏறத்தாழ 60 பிரிவைக் கொண்டது. இப்பிரிவுகளில் மிக் 29, மிக் 27, மிராஜ் 2000, மீக் 25 கன்பெரால் -CANBERRAS- அஜீற்ஸ் -AJEETS- மாருற்ஸ் -MARUTS- ஆகிய விமானங்கள் உள்ளடஙகுகின்றன.

இவற்றிற்கு மேலாக, 3000 முதல் 5000 வரையிலான உறுதி வாய்ந்த தேசிய பாதுகாப்புப் படையும், 90,000 மத்திய ரிசேர்வ் பொலிஸ்படையும், 90.000 எல்லைப் பாதுகாப்புப் படையும் -BORDER SECURITY FORCE-, உறுதிமிக்க 40000 அஸ்ஸாம் ரைபிள் படையும் உண்டு.

## நேபாளம்

| | |
|---|---|
| - மொ. உள்நாட்டு உற்பத்தி | 2.59 பில்லியன் டொலர் |
| - பாதுகாப்புச் செலவு | 37.1 மில்லியன் டொலர் |
| - சனத்தொகை | 18,040'000 |
| - மொத்த ஆயுதப்படை | 35,000 |

நேபாள இராணுவம் ஏறத்தாழ 12 இழுத்துச் செல்லக்கூடிய பீரங்கிகளையும், 25 ஒட் மோட்டார்களையும் 6 ஹெலிகொப்டர்களையும் -3 சேடாக் - CHETAK உட்பட- 3 கனரகமற்ற விமானங்களையும் -Light aircraft- ஏனைய கருவிகளுடன் கொண்டுள்ளது.

-சார்க் அமைப்பின் ஏனைய உறுப்பு நாடுகளான பூட்டான், மாலைதீவு ஆகியவற்றின் இராணுவ பலம் பெறப்படவில்லை. இராணுவத் தகவல்கள் இல்லஸ்ரேட்டட் வீக்லி ஒப் இந்தியா ஜூன் 11 - 17, 1989 இதழில் இருந்து பெறப்பட்டது - நன்றி.-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசரகால சட்டம்....

(3-ஆம் பக்கத் தொடர்)

களுக்கு யாரும் பதில் சொல்ல முடியாத நிலை இந்த நாட்டில் ஏற்படும் என்பதை நான் சொல்லி வைக்க விரும்புகின்றேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியிலிருந்த காலத்திலே இருந்த அவசரகால நிலை என்றாலும் சரி, ஐ. தே. கட்சி ஆட்சியிலிருந்த காலத்திலே இருந்த அவசரகால நிலை என்றாலும் சரி, ஒன்றை மாத்திரம் நாங்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். அவசரகாலச் சட்டம் என்ற பெயரிலே இன்னும் சொற்ப நாட்களில் பத்திரிகைகளின் சுதந்திரத்துக்குத் தடை போடுவார்கள். பத்திரிகைகளுக்குக் கைவிலங்கு போடுவார்கள். Competent Authority என்று தகுதிவாய்ந்த அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் மக்களுக்கு உண்மை நிலை தெரியாத ஒரு சூழ்நிலை ஏற்படுமாயின் எந்த நோக்கத்திற்காக நாங்கள் அவசரகால நிலையைக் கொண்டுவந்தோமோ அந்த நோக்கத்தை எங்களால் நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும்.

இன்று இந்த நாட்டிலே வேலை நிறுத்தம் நடைபெறுகின்றது. பாடசாலை மாணவர்கள் வீதிகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றார்கள். தினமும் கொலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. வேலைநிறுத்தத்தின் காரணமாக மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுமோவென்ற ஒரு பேரச்சம் ஏற்பட்டுள்ளது. சாப்பிடுவதற்கு உணவு இல்லாத ஒரு நிலைமை ஏற்படுமோ என்று மக்கள் அஞ்சுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இங்கு நாங்கள் எங்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றோம். நாடு வெகு விரைவில் இரண்டாகப் பிளவுபட்டுவிடுமோ என்று எண்ணுகின்ற அளவுக்கு இந்நாட்டின் பிரச்சினைகள் மேலும் வளர்வதற்கு அனுமதிக்கின்றவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

இச்சந்தர்ப்பத்திலே நான் ஒரு விடயத்தை மாத்திரமே மிக வினயமாக அரசாங்கத்திடம் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அது என்னவென்றால், நீங்கள் எடுக்கின்ற முயற்சிகள் எல்லாம் நல்லெண்ணத்தோடு எடுக்கப்படுகின்றபொழுது அந்த நல்லெண்ணம் உங்கள் மனதிலே இருந்தால் மட்டும் போதாது. அது வெளியில் பிரதிபலிக்கக்கூடியதாக உங்கள் செயற்பாடுகள் இருக்க வேண்டும்.

நேற்றையதினம் நான் பாராளுமன்றத்திற்கு வர ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் புத்தளத்தில் இருந்து எனக்குத் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. கடந்த சில நாட்களாக புத்தளத்தில் மக்கள் பயமுறுத்தப்பட்டதாகவும் முகமூடி அணிந்தவர்கள் வந்து பொருட்களை அபகரித்துப் போனதாகவும் முறையீடுகள் வந்தன. நேற்றிரவு திடீரென ஒரு கூட்டம் புத்தளம் பஜாருக்கு வந்து துப்பாக்கிகளால் வெடிவைத்ததாகவும் சொன்னார்கள். இவ்வாறு தாக்கியவர்கள் பொலிஸ் கொமாண்டோக்கள் என்று எங்களுக்கு அறியக் கிடைத்தது. இவர்களுடைய தாக்குதலிலிருந்து அப்பாவிப் பொது மக்களைக் காப்பாற்றுவதற்காகப் புத்தளம் பொலிஸார் வரவேண்டிய நிலைமை ஏற்பட்டதென்றால் நிலைமை எவ்வளவு மோசமாகிக்கொண்டு வருகின்றதென்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலே நிலைமை இன்னமும் மோசமாகிக் கொண்டே போகின்றது. நேற்று என் சகோதரர் வன்னி மாவட்டத்தின் பிரதிநிதி அவர்கள் எனக்குத் தெரிவித்த தகவலின்படி, அங்கே வீதிகளில் செல்லுகின்ற வாலிபர்கள் எல்லோரும் வாகனங்களிலே ஏற்றப்பட்டு கட்டாய இராணுவப் பயிற்சிக்கு அழைத்துச் செல்லப்படுவதாகக் கூறினர். திருகோணமலையிலிருந்து எங்களுக்கு முறையீடுகள் வந்து கொண்டிருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலேயிருந்து எங்களுக்கு முறையீடுகள் வந்திருக்கின்றன. பாடசாலைகளுக்குச் செல்லுகின்ற மாணவர்களையெல்லாம் வாகனங்களில் ஏற்றிக்கொண்டு கட்டாய இராணுவப் பயிற்சிக்குக் கொண்டுசெல்லுகின்றார்கள். தற்பொழுது அரசாங்கம் கொழும்பிலே புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்றபொழுது இவை எல்லாம் எதற்காக என்று பொதுமக்கள் சந்தேகிக்கின்றார்கள். புலிகளுடன் எதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன என்ற தெளிவு இல்லாததன் காரணமாக அவர்கள் அவ்விதம் சந்தேகிக்கின்றார்கள். ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைகளைக் கலைத்துவிடுவதற்காகவும் ஏற்கனவே பல தியாகங்களுக்கு மத்தியிலே வடக்கு-கிழக்குப் பிரதேசங்களிலே அமைதியை ஏற்படுத்துவதற்காக மாகாணசபையையும், சட்டத்தையும், ஒழுங்கையும் இல்லாமற் செய்வதற்காகவும் இந்தப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் நடத்துகின்றதா என்று மக்கள் சந்தேகிக்கின்றார்கள். எனவேதான், இந்திய அமைதிகாக்கும் படை வெளியேறும்பட்சத்தில் திடீர் என்று ஒரு யுத்தம் வரக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாக இன்று அவர்கள் ஒரு யுத்தத்திற்கு ஆயத்தமாவதன் பொருட்டு வீதிகளில் நிற்கின்ற அப்பாவி வாலிபர்களையும் சிறுவர்களையும் அழைத்துச்செல்கின்றார்கள்.

> "இது எங்களுடைய நாடு. இந்த நாட்டிலே எந்த ஓர் அந்நியப்படையும் இருப்பதை நாங்கள் விரும்பவில்லை என்பதில் தெளிவாக இருக்கிறோம். அரசிடம் நாம் கேட்பதெல்லாம், இந்தியப் படை வெளியேறுவதற்கு முன்பு மக்களுடைய பாதுகாப்பை உறுதி செய்யுங்கள் என்பதை மட்டும்தான்."

அதுமாத்திரமல்லாமல், நான் நேற்று இந்தச் சபையில் இல்லாத நேரம் ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது. அதாவது இந்தியப் படை இந்த நாட்டில் இல்லாவிட்டால் 24 மணி நேரத்தில் முஸ்லிம்கள் அழிக்கப்படுவார்கள் என்று நான் இந்திய வானொலிக்குக் கூறியதாகவும் அதை இந்திய வானொலி ஒலிபரப்பியதாகவும் இங்கே ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அதை இலங்கை வானொலியும் நேற்று ஒலிபரப்பி இருக்கிறது. இங்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். அதாவது கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்காக ஒரு பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டியது. அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டிலே நாங்கள் கூறிய எங்கள் நிலைப்பாடு மிகவும் தெளிவானது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய நாங்கள் இந்தியப்படைகள் சம்பந்தமாக மிகவும் தெளிவானஒரு நிலைப்பாட்டை வைத்திருக்கின்றோம். கௌரவ ஜனாதிபதி அவர்கள் இந்தியப் படை இந்த நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்று சொன்னதற்கு முன்பே நான் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக இந்தப் பாராளுமன்றத்திலே மிகவும் தெளிவாக எங்களுடைய நிலைப்பாட்டைக் கூறியிருக்கிறேன். இது எங்களுடையநாடு. இந்த நாட்டிலே எந்த ஓர் அந்நியப் படையும் இருப்பதை நாங்கள் விரும்பவில்லை என்பதை நாங்கள் மிகவும் தெட்டத்தெளிவாகவும் கூறி இருக்கின்றோம். ஆனால், அரசாங்கத்திடம் நாங்கள் கேட்பதெல்லாம் ஒன்றை மாத்திரம்தான். அதாவது இந்தியப் படை வெளியேறுவதற்கு முன்பு மக்களுடைய பாதுகாப்பை உறுதி செய்யுங்கள் என்பதுதான் அங்கே தயவுசெய்து ஒரு வெற்றிட நிலைமையை ஏற்படுத்தவேண்டாம் என்பதை மாத்திரம் தாம் நாங்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறிவைத்திருக்கின்றோம். பத்திரிகையாளர்களுக்கு மத்தியிலே எங்களுடைய கொள்கைகளை விளக்கிக்கொண்டிருக்கும்பொழுது அவர்கள் "வெற்றிட நிலைமை என்பதன் கருத்து என்ன" என்று கேட்டார்கள்.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, ஸ்ரீ ல. முஸ்லிம்காங்கிரஸைப் பொறுத்தவரையில் 24 மணித்தியாலம்கூட எங்களால் ரிஸ்க் எடுக்க முடியாது. 24 மணி நேர வெற்றிடம் இருந்தாலும் முஸ்லிம்கள் துடைத்தெறியப்பட முடியும். இது தான் எங்களது நிலைமை. இதைத்தான் நான் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினேன். அதனால் தயவுசெய்து மக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துக. அரசாங்கத்திடம் இதனைக் கேட்டுக்கொள்கிறேன். ஒரேயொரு கேள்வியைத்தான் அரசாங்கத்திடம் கேட்க விரும்புகிறேன். வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பாதுகாப்பை ஏன் அரசாங்கம் கையேற்க முடியாதுள்ளது? தயவுசெய்து மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குக. மாகாண சபைகளை இப்பொழுது உருவாக்கியுள்ள நீங்கள் அவற்றிற்கு அதிகாரங்களை வழங்குங்கள். மாகாண சபைகள் தங்களுக்கான பொலிஸ் படையை உருவாக்கிக் கொள்ள அனுமதியுங்கள்.

இதைச்செய்யாமல் தயவுசெய்து மக்களைக் குழப்பவேண்டாம் என்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இந்திய வானொலி மாத்திரமல்ல, இலங்கை லேக்ஹவுஸ் நிறுவனமும் முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராக மிகவும் மோசமான முறையிலே பிரசாரங்களைச் செய்துகொண்டுவருகின்றது. "தினகரன்" பத்திரிகையிலும் இதே செய்தியைப் போட்டிருந்தார்கள். ஆனால், ஒன்றை நான் இந்தப் பாராளுமன்றத்திலே சொல்ல விரும்புகிறேன். "தினகரன்" பத்திரிகையாளர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஒவ்வோர் ஐந்து நிமிடமும் முஸ்லிம் காங்கிரஸிடமிருந்து செய்திகளை எடுத்து அவர்களுக்குத் தேவையான நேரத்திலெல்லாம் பாவித்தார்கள்.

> "நாய்வாலை அளவெடுத்து நறுக்கித் தீட்டின்
> நல்லெழுத் தெழுதும் எழுத்தாணியாமோ?
> பேய் வாழும் சுடுகாட்டைப் பெருக்கித்தள்ளி
> தெருவிளக்கை ஏற்றிவிட்டால் வீடதாமோ?"

இன்று முஸ்லிம் காங்கிரஸ் தனித்துவமாகப் பேசுகின்றபோது அதைப் பத்திரிகையில் போடக்கூடாது என்ற நிலைப்பாட்டை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். 'தினகரன்' பத்திரிகையாளர்கள் என்றாலும் சரிதான், வேறு எந்தப் பத்திரிகையாளர்கள் என்றாலும் சரிதான், அவர்கள் செய்திகளை எழுதிக்கொண்டிருக்கின்றபோது- தயவுசெய்து தனிப்பட்ட ஒரு சிலருக்கு மாத்திரம் அவர்கள் பிரசார சாதனமாக இருக்கக்கூடாது. அப்படி ஒரு தனிப்பட்ட சிலருக்கு மாத்திரம் பிரசார சாதனமாக அவர்கள் பத்திரிகையைப் பாவித்த காரணத்தினால் பத்தாயிரம் பிரதிகள் விற்கப்பட்ட 'தினகரன்' பத்திரிகை கடந்த ஆறு மாதங்களுக்குள் மூவாயிரம் பிரதிகளாகக் குறைந்துவிட்டது. இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கிடையில் ஒரு பிரதிகூட விற்க முடியாத நிலை ஏற்படலாம்.

எனவே, பிரதித் தவிசாளர் அவர்களே, அவசரகாலச் சட்டங்களால் மாத்திரம் ஒரு நாட்டின் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது.

இன்று காலை கௌரவ சபாநாயகர் அவர்கள் இந்தப் பாராளுமன்றத்திலே ஜே. வி. பி. யினரைப் பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைப்பு விடுத்திருக்கிறார். ஜனநாயகத்தில் நம்பிக்கை வைக்காத "ஜே.வி.பி.யை நீங்கள் கூப்பிட்டு, ஆயுதங்களை வைத்துவிட்டுப் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள், நீங்கள் நியமிக்கின்ற இடத்திலே பேசுவதற்கு நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோ"மென்று சொல்லுகிறீர்கள். அதேநேரத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்டு, மக்களுடைய வாக்குகளைப்பெற்று இச்சபைக்கு வந்திருக்கின்ற கட்சிகளை உதறித் தள்ளிவிட்டு, உதாசீனம் செய்துவிட்டு ஆட்சியை நடத்திக்கொண்டுபோகலாமென்று நீங்கள் நினைத்தால் இந்த அவசரகாலச் சட்டங்களால் எவ்வித நன்மையும் ஏற்பட முடியாது. - இவ்வாறு அவர் கூறினார்.

## அலி உதுமான் .....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு, ஆயுதங்கள் எதுவுமே வழங்கப்படாத நிலையில் நாம் நிராயுதபாணிகளாக எமது கைகளை நம்பியவர்களாகவே எமது பிரதேசங்களில் பயங்கரவாதிகள் வாழும் பல பகுதிகளுக்குள் செல்லவேண்டியிருக்கிறது.

★ நாளை இச்சபையில், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் அல்லது ஐ. தே. கட்சியின் தனி உறுப்பினர் ஒருவர் கடத்தப்பட்டார் அல்லது கொல்லப்பட்டார் என்றசெய்தியை நாம் கேள்விப்பட்டால்-மாகாண சபையில் ஒரு கண்டனத் தீர்மானத்தை எல்லாரும் நிறைவேற்றி, பத்திரிகைகளுக்கு செய்திகள் அனுப்பி விட்டு அமர்ந்துவிடுவது இந்தமாகாணசபையின் நடவடிக்கையாக இருக்குமானால் இக் கண்டனத் தீர்மானத்தை இம்மாகாண சபையின் மீது தான் நிறைவேற்ற வேண்டி வரும் என்பதை நான் உங்களுக்குக் கூறிவைக்க விரும்புகிறேன்.

★ எங்களது பாதுகாப்பை நீங்கள் உத்தரவாதப்படுத்தாது எங்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தவறும்பட்சத்தில்-உங்களில் இருக்கும் நம்பிக்கையையும் இழப்பதற்கான சந்தர்ப்பத்திற்கு நாங்கள் தள்ளப்படுகையில் எங்களை நீங்கள் குற்றம் கூற முடியாது. எங்களது பாதுகாப்புக்கு என்ன வழிகள் செய்யவேண்டுமோ-அந்தந்த வழிகள் எதையும் செய்யத் தயங்கமாட்டோம் என்பதையும் கௌரவத் தலைவர் அவர்களைச் சாட்சியாகவைத்து சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களுடைய தலைமையின்கீழ் சரியான ஏற்பாடு செய்யப்படாவிட்டால்-உறுப்பினர் சிவபாலராஜாவுக்கு நடந்த கதி நாளை என்னுடைய சகோதரர்களான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் நடைபெறும்போது, அதற்குரிய பொறுப்பை நீங்கள்தான் ஏற்கவேண்டி வரும் என்பதை நான் உங்கள் முன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலி உதுமானின்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு அடுத்ததாக-இப்போது அக்கரைப்பற்று முஸ்லிம்கள் மீதான தாக்குதலும், மாகாணசபை உறுப்பினர் அலி உதுமான், பாடசாலை மாணவன் நயீம் ஆகியோரின் படுகொலைகளும் நிகழ்ந்துள்ளன.

தொடர்ந்து முஸ்லிம்கள்மீது மேற்கொள்ளப்படும் இவ்வாறான சம்பவங்களால் குறிப்பாக வடகிழக்கு மாகாண ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் ERRLF- ENDLF கூட்டரசாங்கத்தின் பங்காளியான ENDLF குழுவினால்-இவ் வெறிச் செயல் நிகழ்த்தப்பட்டிருப்பதானது, இப்பிரதேச முஸ்லிம்களுக்கான பாதுகாப்பு வட-கிழக்கு மாகாணசபையால் வழங்கப்பட முடியாது என்பதையும், சமூக ரீதியில் அமைந்த அதிகாரப் பரவலாக்கல் அலகு மூலமே-அதாவது முஸ்லிம்களுக்கான தனித்த ஒரு மாகாணசபைதான் முஸ்லிம்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய உறு

### ★ முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம்: சமூகரீதியான அதிகாரப் பரவலாக்கல் மூலமான முஸ்லிம் மாகாணசபை மட்டுமே!

தியானதும், இறுதியானதுமான தீர்வு என்பதையும் மேலும் நிச்சயமாக்குகின்றது.

வட-கிழக்கு மாகாண அரசாங்கத்தின் பங்காளியான ENDLF குழுவே நடந்து முடிந்த அக்கரைப்பற்றுச் சம்பவத்திற்கு முழுக்காரணம் என்றவகையில்-இச்சம்பவத்திற்கான முழுப் பொறுப்பையும் வட-கிழக்கு மாகாணசபையே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அதேவேளையில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களின் மெய்ப் பாதுகாப்பாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கவேண்டிய ஆயுதப் பயிற்சிகளையும், வழங்கவேண்டிய ஆயுதங்களையும் வழங்காது-இன்னும் காலந்தாழ்த்திக்கொண்டிருக்கும் இலங்கை அரசாங்கமும் இப்படுகொலையின் பங்கினை உணரவேண்டும்.

ஆயுதந்தரித்துள்ள. தீவிரவாதக் குழுக்களை நிராயுதபாணிகளாக்க வேண்டும் அல்லது ஆகக் குறைந்தது அக்குழுக்களை தமது பூரணமானதும் நேரடியானதுமான கட்டுப்பாட்டுக்குள் இந்திய அமைதிப் படை கொண்டுவரவேண்டுமென்று முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து. வந்துள்ளது.

நிராயுதபாணிகளான இப்பிரதேச முஸ்லிம்கள் பயமின்றி வாழவும்-தமிழர் சமூகத்தை சகோதரவாஞ்சையுடன் அணைத்துக்கொள்ளவும் மேற்கூறிய நடவடிக்கை உதவியாக இருக்கும். ஆனால், இந்திய அமைதிப்படை இந்த இரண்டில் ஒன்றையாயினும் இதுவரை செய்யாமல்-மெத்தனமான போக்கில் இருந்துகொண்டிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. தமது செல்லப்பிள்ளைகளான சில தீவிரவாத ஆயுதக் குழுக்களை தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு இந்திய அமைதிப்படைக்கு வெகு இலகுவான காரியமே.

எனவே, நிலைமைகளை உணர்ந்து-இப்பகுதி தமிழர் முஸ்லிம்களின் நல்லுறவைப் பேணி வளர்ப்பது காலத்தின் கட்டாயம் என்பதை இ. அ. படை உணர்ந்து-இவ்வாறான இனப் படுகொலைகளை நிறுத்த உத்தரவாதமான நடவடிக்கைகளை இனியாவது மேற்கொள்ளும் பொறுப்பை அது கடைப்பிடிக்கவேண்டும்.

இவற்றைச் செய்யாததால், அலி உதுமானின் கொலைக்கு பதில் சொல்லவேண்டிய கடப்பாடு அமைதிப் படைக்கும் இருக்கின்ற அதே வேளையில், இனிமேலாவது இவ்வாறான சம்பவங்களை நிறுத்த உத்தரவாதமளிக்கும் பொறுப்பை அமைதிப் படையினர் அளிக்கவேண்டும். மாறாக, இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் முஸ்லிம்கள் மீது நடைபெறுமாயின் அவற்றின்முழுப் பொறுப்பையும் அமைதிப்படை ஏற்று பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்பதை முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்துகிறது.

முஸ்லிம்களாகிய நமக்கு, சமூக ரீதியிலான அதிகாரப் பரவலாக்கல் மூலமே-முஸ்லிம் மாகாண சபை ஒன்றின் மூலமே-பாதுகாப்பும் நிரந்தரத் தீர்வும் ஏற்படும் என்பதை உணர்ந்து, அதற்கான போராட்டத்தைக் கூட்டாக முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

## இந்திய அ. படை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரத்தில் உள்ளவர்களோ, இலங்கை அரசோ, இந்திய அரசோ வடக்கு-கிழக்கு மாகாண அரசோ அல்லது இன்றுள்ள ஆயுதக் குழுக்களோ தமது அரசியல் தேவைக்காகவும், சுயநலத்திற்காகவும் இப்பகுதி முஸ்லிம்களை வெறும் பகடைக் காய்களாகப் பாவிப்பதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

### "எந்தப் பேச்சுவார்த்தையிலும் முஸ்லிம்களின் பிரச்சினை இடம் பெறுவது அவசியம்"

ஏனெனில் இலங்கைவாழ் முஸ்லிம்களும் இந்த நாட்டின் ஒரு தேசிய சமூகம். இச்சமூகத்திற்கும் ஏனைய சமூகங்களுக்குள்ள பிரச்சினைகளும், தேவைகளும் இருக்கின்றன. இவை புறக்கணிக்கப்படக் கூடாது; புறக்கணிக்கப்படவும் முடியாது. ஒரு சிறுபான்மை தேசிய சமூகத்தைப் புறக்கணித்து-அதன் குரல்வளையை நசித்து இன்னொரு சிறுபான்மை தேசிய சமூகத்திற்கு அதிகாரப் பரவலாக்கத்தையும், பாதுகாப்பையும் பெற்றுக்கொடுக்கின்ற ஒரு காரியம் நடைபெறுமாயின் அது மிகவும் அநீதியானதாகும்; அரசியல் அட்டூழியமாகும், அச்சமூகத்திற்கு அளிக்கின்ற அரசியல் கொடூரமாகும்.

ஸ்ரீ. ல. முஸ்லிம் காங்கிரஸானது பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை கொண்ட ஓர் அரசியல் கட்சியாகும். ஆயுதங்களால் அன்றி ஆதரவான, நட்பு ரீதியில் அமைந்த பேச்சுவார்த்தைகள் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்று அது உறுதியுடன் நம்புகிறது.

இந்திய அமைதிப்படை விலகல் விவகாரத்தில், இந்தியா வடக்கு-கிழக்கு மாகாணத்தின் அதிகாரப் பரவலாக்கல் பூர்த்தி, பாதுகாப்பு, புலிகள் ஆயுதத்தைக் கையளித்தல் போன்றவற்றைச் சம்பந்தப்படுத்தி அதனை இலங்கை அரசிடம் தெளிவாகக் கூறியும்விட்டது. இந்த நிலையில் இலங்கை தீர்க்க தரிசனத்துடனும், அரசியல் சாணக்கியத்துடனும் இந்த விடயத்தை அணுக வேண்டும். இவ்வாறு அணுகும் வேளையில்-இலங்கையும் இந்தியாவும் இதுகாலவரை புறக்கணித்தோ அல்லது மூடி மறைத்தோ வந்துள்ள வட-கிழக்குவாழ் முஸ்லிம்களின் பிரச்சினைகளையும் கவனத்தில் எடுக்க வேண்டும். அதற்கு வசதியாகவும், முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கேற்பவும், முஸ்லிம் காங்கிரஸின் கருத்துக்களைக் கேட்டறியவேண்டும். அதனையும் பேச்சுவார்த்தைகளின்போது அழைக்கவேண்டும்.

இல்லாதுபோனால், முஸ்லிம்களின் நிரந்தர அமைதிக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதமளிக்காத எந்தஏற்பாடும்வடக்கு-கிழக்குப்பகுதிகளில்மட்டுமல்ல, முழு இலங்கைக்கும் நிரந்தர அமைதியை ஏற்படுத்தப்போவதில்லை என்பதை எதிர்காலம் நிச்சயம் நிரூபிக்கும்.

முஸ்லிம்கள் நிரந்தர சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும்' அமைதியையுமே விரும்புகிறார்கள். இஸ்லாம் வலியுறுத்துவதும் இவற்றையே.

## முஸ்லிம் உலகம்....

(5-ஆம் பக்கத் தொடர்ச்)

தெரிவித்தது. ஏகாதிபத்தியங்கள் ஆயுத மூலப்பொருட்களில், ஆயுத உற்பத்தியில், ஆயுத உற்பத்தி நிபுணத்துவத்தில், ஆயுதவிற்பனையில் தாமே ஏகபோகம் செலுத்தவேண்டும். மூன்றும் உலகின் பாதுகாப்பும் பந்தோபஸ்தும் தாம் விரும்பியவாறு தமது பிடியில் இருக்கவேண்டும் என்ற நோக்கம் கொண்டவை. அதனால் நிபந்தனைகள் விதிக்கின்றன. பாதுகாப்பு பந்தோபஸ்து விஷயங்களில் உத்தரவு போடுகின்றன. ஒரு சில விஷயங்களில் இது மீறப்பட்டாலும் பெரும்பாலும் அவை நிறைவேற்றப்படுகின்றன. சுருங்கச்சொன்னால் மூன்றும் உலகம் பெற்றுள்ள சர்வதேசக் கடனுக்கும் ஆயுதக் கொள்வனவுக்கும் நெருக்கமான சம்பந்தம் உண்டு என்பதே இங்கு முக்கிய குறிப்பாகும்.

### கல் நெஞ்சம் படைத்தவை

உலக வங்கிபோன்ற சர்வதேச நிதிநிறுவனங்கள் எள்ளளவும் ஈவிரக்க மில்லாதவை. கல்நெஞ்சம் படைத்தவை. அவை வழங்கும் கடனுக்கு வட்டியை அறவிடுவதோடு நின்றுவிடுவதில்லை. கடன் பெறும் நாடுகளின் உள்விவகாரங்களில் தன் பிடியை வலுப்படுத்தும். கடன்பெறும் நாடுகள் தம்மக்களின் தேவைகளுக்கும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், வறுமையிலிருந்து மீளவும் அபிவிருத்திக்கு முழுமையாகச் செலவிடாது தடுக்கச்செய்யும். இவ்வகைச் செலவினால் தாம் கொடுத்த கடனையும் வட்டியையும் திரும்பப் பெறமுடியாது போய்விடும் என்ற அச்சம் அவைக்கு உண்டு. கடன்பெறும் நாடுகளின் சேமநலன்களைப்பற்றி அவை அக்கறைப்படுவதில்லை. எனவே வரியைக் கூட்டச் சொல்லும் பொருட்களின் விலையை ஏற்றச் செய்யும். அபிவிருத்தித் திட்டங்கள்பலவற்றை வெட்டும்படி நிர்ப்பந்திக்கும். இவையெல்லாம் 'ஆலோசனைகள்' என்ற பெயரில் இடப்படும் ஆணைகள். இதனால் விலைவாசி உயர்ந்து வாழ்க்கைச் செலவு உச்சத்துக்கு ஏறி மக்கள் திணறுவர். அவர்களின் அதிருப்தியும் எதிர்ப்பும் அரசாங்கங்களைத் தாக்கும். எதிர்ப்பைச் சமாளிக்க அரசாங்கங்கள் அடக்குமுறையைக் கையாளும். இந்த வருடம் ஏப்ரலில் நடந்த ஜோர்தான் கலவரம் ஓர் உதாரணம்.

ஜோர்தான் 600 கோடி 50 லட்சம் டாலர்கள் கடன் பெற்றுள்ளது. செலவை குறைத்து, வரியை கூட்டி வரவு செலவுத் திட்டத்தில் 'பட்ஜட்'ஏற்படும் பற்றுக்குறையைசமாளிக்குமாறு சர்வதேச நாணய நிதியம் 'ஆலோசனை' வழங்கியது. ஆயுதக் கொள்வனவைக் குறைக்க மட்டும் இந்நிதி நிறுவனங்கள் கடன்பெறும் நாடுகளுக்கு 'ஆலோசனை' கூறுவதில்லை. ஜோர்தான் அரசாங்கம் மேற்கூறிய 'ஆலோசனை, யை ஏற்று பெற்றோல், சிகரட், பானங்கள், டெலிபோன், கார் லைசன்ஸ்: சலவைப் பொருட்கள், மற்றும் பல உணவு சாமான்களின் வரியை 20 வீதம் உயர்த்தியது. மக்கள் இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். பொலிசார் அடக்க முயன்றனர். கலகம் வெடித்தது. எட்டுப்பேர் கொல்லப்பட்டனர். பொருளாதார வெளிவிவகாரங்களைத் தன்கையில் வைத்திருந்த பிரதமர் செய்த்-அர்ரிபாய் பதவியிலிருந்து விலகவேண்டும் என்ற மக்களின் கோரிக்கை வலுப்பெற்றது. இறுதியில் பிரதமர் தன் பதவியிலிருந்து இறங்க நேர்ந்தது.

### மேலும் கடன் சுமை

பெற்றுள்ள கடனையும் வட்டியையும் படிப்படியாகச் செலுத்தவேண்டுமானால் கடன் நிதி முழுமையாக அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்யப்படவேண்டும். ஆயுதங்கள் வாங்குவது முதலீடு அல்ல. அவை நாசத்தையும் அழிவையும் தவிர வேறு எந்த இலாபத்தையும் தரப்போவதில்லை. எனவே முதலீடு நேர்மையாகவும் திறமையாகவும் செயற்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் வருமானம் பெருகும். கடனையும் வட்டியையும் செலுத்தலாம். ஆயுதக் கொள்வனவுக்கும் இராணுவத் தயாரிப்புக்கும் பெருந்தொகை போய்விடுவதால் அபிவிருத்தி முன்னேறவில்லை. வருமானமும் பெருகவில்லை. இந்தப்போக்கினால் பெற்றுள்ள கடனுக்குரிய வட்டியைச் செலுத்தவே முடியாத நிலையில் மூன்றும் உலகம் தவிக்கிறது. வட்டியைச் செலுத்தவே மேலும் கடன்பெற வேண்டியுள்ளது. இந்த விஷச்சுழலில் சிக்குப்பட்டுள்ளது மூன்றும் உலகம்.

### இருமுனைத் தாக்கம்

உலகச்சந்தையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மேற்கத்திய ஏகாதிபத்திய சக்திகள் மூன்றும் உலகிலிருந்து பெரும்பாலான மூலப்பொருட்களையும், தேயிலை, கோப்பி, தெங்குப் பொருட்கள் உட்பட சில உணவுப் பொருட்களையும் பெறுகின்றன. ஆனால் உலகச் சந்தையில் இவற்றின் விலையை அவ்வப்போது குறைக்கின்றன. மேலும் மூன்றும் உலகநாடுகள் ஏற்றுமதி செய்யும் இவ்வகையான பொருட்களுக்கு இறக்குமதியை எக்கச்சக்கமாக உயர்த்துகின்றன. அதேவேளையில் தமது ஏற்றுமதிகளின் விலையைக் கூட்டியும் வருகின்றன. இந்த இருமுனைத் தாக்கத்தினாலும் மூன்றும் உலகம் தள்ளாடுகின்றது.

இதனைப்பற்றி பாகிஸ்தான் பேராசிரியர் அஹ்மத் அண்மையில் நடைபெற்ற ஒரு சர்வதேச மாநாட்டில் கூறியதை இங்கே எடுத்துக் காட்டுவது பொருந்தும்.

மூன்றும் உலக நாடுகளின் பொருளாதார உயர்வுக்குப் பலம்வாய்ந்த நாடுகள் எழுப்பும் வரிமதில்கள் தடையாக உள்ளன. கடன்பெற்ற நாடுகள் மேற்கத்திய நாடுகளின் சந்தைக்குள் பிரவேசம் செய்வது இன்று சாத்தியமில்லை. இந்த நிலைமை நீடிக்கும்வரை கடன் பிரச்சினை நீடிக்கத்தான் போகிறது.

மேற்கூறிய நிலைமைகளில் சிக்கித் தத்தளிக்கும் மூன்றும் உலகமும் அதனைச் சேர்ந்த முஸ்லிம் நாடுகளும் பொருளாதார வளர்ச்சியைப் பெறுவது எப்படி? கடன் சுமையிலிருந்து மீளுவது எங்ஙனம்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உத்தியோக பூர்வ இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு 12ல் உள்ள | C C. Co.யில் அச்சிடப்பட்டு கொழும்பு 12. இல. 375/2, டாம் வீதி' ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸால் வெளியிடப்பட்டது